# விசாலம்

யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை



# Visalam

J/Mallakam Visaladchi Vidyasalai

2014

# விசாலம்



யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை

2014

# விசாலம்

யா/மல்லாகம் விசாலாட்சி
வித்தியாசாலை

**2014**

# உள்ளடக்கம்


01) பாடசாலைக் கீதம் ii
02) தூரநோக்கு, பணிக்கூற்று iii
03) ஆசிச்செய்திகள் iv - xvi
சிவநெறிக் கலாநிதி பிரம்மஸ்ரீ முத்தையாக் குருக்கள் நாகேந்திர சர்மா
கலாநிதி ஆறு திருமுருகன்
அருட்தந்தை ம.றெக்ஸ் சவுந்தரா
திரு. செ.சந்திரராஜா - வலயக்கல்விப் பணிப்பாளர்
திரு. க. சண்முககுலகுமாரன் - கோட்டக்கல்விப் பணிப்பாளர்.
திருமதி. றூபா உதயரட்ணம்
திருமதி. ஜெயரஞ்சினி மயில்வாகனம்
திரு. ந.மகேஸ்வரன் - முன்னாள் ஓய்வுநிலை அதிபர்
திரு. திருச்சி நவரத்தினம் - முன்னாள் ஓய்வுநிலை அதிபர்
திரு. இ.கங்காதரன் - கிராம அலுவலர் - மல்லாகம் மத்தி
திருமதி. செ.சிவபாலரத்தினம் முன்னாள் ஓய்வுபெற்ற ஆசிரியர்
04) அதிபரின் உள்ளத்திலிருந்து.... xvii
05) பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி xviii
06) மலராசிரியரின் உள்ளத்திலிருந்து.... xix - xx
07) அதிபர் அறிக்கை 01 - 09
08) புலமைப் பரிசில் பகுப்பாய்வு 10 - 11
09) பாடசாலை வரலாறு 12 - 13
10) பழைய மாணவர் ஆக்கங்கள் 14 - 24
11) ஆசிரியர்களின் ஆக்கங்கள் 25 - 46
12) மாணவர் ஆக்கங்கள் 47 - 64
13) தினவரவு ஒழுங்கு, இலவசப் பாடநூல் பேணுகை 65
14) கல்வி நிலை - 2013 66
15) இணைபாடவிதானச் செயற்பாடுகள் 2010 - 2014 67 - 73
16) அன்பளிப்பு வழங்கியோர் 74 - 75
18) நன்றிகள் 76 - 77

# பாடசாலைக் கீதம்

சுந்தர முகத்து விநாயகனை
சுகம் பெற அனுதினமும் துதித்திடுவோம்
செந்தமிழ் ஆங்கிலம் சிறப்புடனே
செம்மணச் செல்வர்கள் நாம் பயில்வோம்

இதுவே எங்கள் கலைக்கோயில்
இனிய தமிழின் கலைக்கோயில்
புதிய புதிய சிற்பிகளைப்
புவனியில் தந்திடும் கலைக்கோயில்

எல்லா மதமும் சம்மதமாய்
எழிலுடன் விளங்கும் கலைக்கோயில்
நல்லவர் சீனியப்பாவின்
நாமம் பூண்ட கலைக்கோயில்

செல்லப்பாவின் முகாமையிலே
செழிப்புடன் விளங்கும் கலைக்கோயில்
வாழிய செந்தமிழ் என்றென்றும்
வாழிய வாழிய வாழியவே

வாழிய வாழிய விசாலாட்சி
வித்தியாசாலை வாழியவே

**இயற்றியவர் :- திருமதி.எஸ்.இராமலிங்கம்**

# VISION

**To bring about a humanitarian society by means of sound education ..........**

## தூரநோக்கு

கல்வித்தகைமைக்கு வித்திடலையும் மனிதவள மேம்பாட்டையும் காத்தவாறு கல்வியை முன்னெடுத்தல்


# MISSION

**Organizing curricular and co – curricular activities with the view to bringing about a just at equitable**

## பணிக்கூற்று

தாபனக் கல்வியை வழங்கி தரமான சமுதாயத்தை உருவாக்கும் வகையில் கலைத்திட்ட இணைபாடவிதானச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்

## எங்கள் அதிபர்




திருமதி.ஏனெஸ்ற் சண்முகநாதன் (S.L.P.S-3)

# ஆசிச் செய்தி



எல்லாம் வல்ல பெருமானாக விநாயகக் கடவுளார் பழம்பதியில் வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற இந்த மல்லாகம் கிராமத்திலே – கல்வி எனும் அழியாச் செல்வத்தை ஊட்ட வல்ல பெரும் பாரம்பரியத்தைக் கொண்டு விளங்குவது மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையாகும்.

இங்கு நடைபெற்றுவரும் கல்வி சார்ந்த செயற்பாடுகளும் இதர நடைமுறைகளும் மாணவர்களின் அறிவு சார் விருத்திக்குப் பெரும் பங்களிப்புச் செய்து வருகின்றமை யாவருமறிந்ததே. இவ்வாறானதொரு வளர்ச்சிப் போக்கிலே இந்த வருடம் நடைபெறுகின்ற வருடாந்த பரிசில் அளிப்பு விழாவிலே "விசாலம்" என்கின்ற மலர் வெளியிடப்படுவது குறித்து நான் மட்டற்ற மகிழ்ச்சியடைவதோடு, எல்லாம் வல்ல பழம்பதி விநாயகப் பெருமானுடைய திருவருளையும் வேண்டி ஆசியுரை வழங்குகின்றேன்.

சுபம்

சிவநெறிக் கலாநிதி,
பிரம்ம ஸ்ரீ
முத்தையாக் குருக்கள்
நாகேந்திரசர்மா
(ஆதீன கர்த்தா)
சர்வதேச இந்துமத குருபீடம்
யாழ் மாவட்ட அமைப்பாளர்.
பழம்பதி, மல்லாகம்



# செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி



சைவமும் தமிழும் வளர்த்த புண்ணிய பூமி மல்லாகம். இத்திருவூரின் இலக்கணமாக விளங்கும் பாடசாலைகளில் மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை தனித்துவம் மிக்கது. பல அறிஞர்களின் வாழ்வில் ஆரம்ப அத்திவாரமாக இப் பாடசாலை விளங்குகிறது. இப் பாடசாலையில் கற்று தம் வாழ்வை மேம்படுத்தியவர்கள் பலர். எங்கள் ஆத்மீக அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மா அவர்கள் என்றும் மதித்துப் போற்றுகின்ற இப் பாடசாலையை வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன். இப்பாடசாலையின் ஆவணமாக இம்மலரை வெளியிட முன்வந்த அதிபர் அவர்களையும், ஆசிரியர்களையும் வாழ்த்துகிறேன். இப் பாடசாலை சிறந்ததொரு ஆரம்பப் பாடசாலையாக வெற்றி நடைபோட வேண்டும் என துர்க்காதேவியைப் பிரார்த்திக்கிறேன்.

சைவத்தமிழ்ப் பண்பாட்டின் அடையாளமாக விளங்கும் இத்தகைய பாடசாலைகள் எமது அருஞ்சொத்துக்கள். இவற்றை உலகம் உள்ளவரை காக்க வேண்டிய கடமை அனைவருக்கும் உண்டு. இங்கு கற்றவர்கள் பாக்கிய சாலிகள். தான் கற்ற பாடசாலையின் வளர்ச்சிக்கு அனைவரும் நல்ல முறையில் பங்களிக்க வேண்டி அமைகின்றேன்.

**கலாநிதி ஆறு திருமுருகன்**
தலைவர்
துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.



# ஆசிச்செய்தி

ஒரு நூற்றாண்டுக்கு மேலான, நீண்ட கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை, இன்றும் தன் தனித்துவத்துடன், களைக்காமல், சளைக்காமல் தன் கல்விப் பயணத்தில் வீறுநடை போடுகின்றாள். இந்த வீறுநடையின் வேகத்தைத் தணிய விடாமல் காத்துக்கொள்வதிலே அக்கறை கொண்டு, தம்மை அர்ப்பணித்து உழைக்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் யாவரையும் வெகுவாகப் பாராட்டி நிற்கின்றேன்.

இது ஓர் ஆரம்பப் பாடசாலை என்பதனால் அதன் முக்கியத்துவத்தைக் குறைத்து எடைபோட முடியாது. ஓர் ஆரம்பப் பாடசாலை ஒரு மாணவனின் கல்வி வாழ்வில் இன்றியமையாத பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அதாவது அவனது வாழ்வின் அடித்தளத்தை ஆணித்தரமாக இடவேண்டிய ஓர் உன்னதமான, அதேவேளையில் கடினமான, பல சவால்கள் நிறைந்த பணியை ஆற்ற வேண்டும். ஒரு மாணவன் தன் வாழ்வை நிர்ணயித்துக் கொள்ளப்போகின்ற குறிக்கோளைத் தெரிவு செய்து, அதை அடைந்து கொள்கின்ற வழி முறைகளைக் கண்டறியவேண்டுமென்கின்ற அறிவைத் தன் ஆரம்பப் பாடசாலைக் காலத்திலேயே அறிந்துகொள்கின்றான். எனவே, வாழ்வில் வெற்றி பெறவேண்டும் என்று துடிக்கின்ற மாணவன் தனது வாழ்வின் இலக்கைத் தெளிவாகவும் உறுதியாகவும் தெரிவு செய்துகொள்ள முன்வர வேண்டும். இத்தகைய முன்னிலைக்குத் தன் மாணவர்களை அழைத்து வருவதே ஆரம்பப் பாடசாலைகளின் பணியாக அமைய வேண்டும், அமைத்துக்கொள்ள வேண்டும்.

இந்த வகையில், யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை தனது பணியைச் செவ்வனே ஆற்றி வருகின்றது என்பது அதன் வரலாற்றில் இருந்து கண்டறிய முடிகிறது. தொடர்ந்தும், அது தன் முழு வேகத்தோடு தன்பணியை ஆற்றி, நல்ல மனிதர்களை உருவாக்கி, ஆரோக்கியமான, நல்லதொரு சமுதாயத்தைப் படைத்திட வேண்டுமென்று ஆசிகள் நல்கி நிற்கின்றேன்.

**அருட்தந்தை ம.றெக்ஸ் சவுந்தரா**
**பங்குத் தந்தை மல்லாகம்.**

# வாழ்த்துச் செய்தி



யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை யினால் பரிசில் அளிப்பு விழாவன்று வெளியிடப் படுகின்ற "விசாலம்" சஞ்சிகையானது முதல் மலராக முகிழ்ந்துள்ளமையினையிட்டு மகிழ்வடைவதுடன், தொடர்ந்தும் இம்மலர் வெளிவரவேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை குறைந்தளவு வளங்களைக் கொண்டமைந்த பாடசாலையாக இருந்த போதிலும் கல்வி, மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பல சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டுள்ள பாடசாலையாக விளங்குகின்றது. இந்நிலையில் இம்மலர் வெளியீடு பாடசாலையின் வரலாற்றினையும், செயற்பாடுகளையும் வெளிக்கொணரும் ஒரு சாதனமாக விளங்கும். அத்தோடு மாணவர்களதும், ஆசிரியர்களதும் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் இம்மலர் அவர்களது அறிவுத்திறன் வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமையும் என்பது நிச்சயம்.

இப்பாடசாலையானது இனிவரும் காலங்களில் சகல துறைகளிலும் வளர்ச்சிகாண வேண்டுமென வாழ்த்துவதுடன், "விசாலம்" மலரானது வெளிவருவதற்கு முன்னின்றுழைத்த அனைத்து ஆசிரியர், மாணவர் மற்றும் பாடசாலைச் சமூகத்தினருக்கும் எனது ஆசிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்வதுடன் மலர் வெளியீடும் சிறப்புற அமைய வாழ்த்துகின்றேன்.

**செல்வரட்ணம் சந்திரராஜா**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**வலிகாமம் கல்வி வலயம்.**



# வாழ்த்துச் செய்தி



யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையானது 120 ஆண்டுகள் கடந்த பழமை வாய்ந்தது. இப்பாடசாலையில் பரிசில் அளிப்பு விழா அமையும் தினம் முதலாவது மலரான "விசாலம்" மலர்வதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

வளர்ந்துவரும் இப்பாடசாலையில் கல்வி இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் வளர்ச்சிப் போக்கைப் பெற்று வருவதோடு தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்தின் வள்ர்ச்சிக்கும் துணை புரிந்து வருகிறது.

இப்பாடசாலையில் பழைய மாணவர்கள். ஆசிரியர்கள், மாணவச் செல்வங்களின் ஆக்கங்களைத் தாங்கிவரும் இம்மலரானது தொடர் நடைபோடவும் தனக்கென ஒரு வரலாற்றைப் பெறவேண்டுமெனவும் வாழ்த்துகின்றேன்.

**க.சண்முககுலகுமாரன்**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்,**
**தெல்லிப்பழை.**



# வாழ்த்துச் செய்தி



யா/மல்லாகம் விசாலாட்சி ஆரம்பப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு தனது 121 அகவையில் பெருமையுடன் காலடி வைக்கின்றது. ஆரம்பக் கல்வியின் பிரதான தேர்ச்சியான "அனைத்து மாணவர்களையும் இடைநிலைக்கல்விக்குத் தயார்படுத்தல்" என்ற பிரதான இலக்கினை இப்பாடசாலை நிறைவு செய்து வருகின்றது. எமது கல்வி அமைப்பில் ஆரம்பப் பாடசாலைகள் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறானது தமது பாடசாலைக்கான சிறந்த குறிகாட்டியாக கருதி வருகின்றனர். அவ்வகையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை மட்டுமன்றி இரு பாடங்களிலும் 70 புள்ளிக்கு மேல் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை இப்பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அதிஉச்ச அளவில் காணமுடிகின்றது. இது ஒரு சிறந்த காட்டியாகும்.

இப்பாடசாலை மீதான பெற்றோர் சமூக அபிமானம் அபரிமிதமானது. பாடசாலை அபிவிருத்தி சார் கூட்டங்களில் பங்கேற்பது மட்டமன்றி கூட்டத் தீர்மானங்களைச் செயற்படுத்துவதிலும் முன்னின்று உழைக்கின்றனர்.

நாட்டின் எதிர்காலச் சிற்பிகளான சிறார்களைச் சிறந்த ஒழுக்க சீலர்களாகவும் கல்வியில் சிறந்தவர்களாகவும் உருவாக்குகின்ற மகத்தான சேவையை இன்று போல் என்றும் சிறப்புற வழங்க வாழ்த்துகின்றேன்.

**திருமதி றூபா உதயரட்ணம்**
**B.Com. PG Dip INED . MPL (MERIT)**
**உதவிக்கல்விப்பணிப்பாளர்**
**வலிகாமம் கல்வி வலயம்.**



# வாழ்த்துச் செய்தி



அறிவுப்பசி நீக்கி மல்லாகம் பதிதனிலே மாண்புடைய சமுதாய உருவாக்கத்திற்காக உதித்த விசாலாட்சி வித்தியாசாலையின் பெருமைகளையும், திறமைகளையும் உலகறியச் செய்யுமுகமாகப் பரந்த நல்லறிவும், மாண்பும், மேன்மையும் உள்ள உள்ளங்களின் எண்ணங்களை வெளியீடாக்குவதற்கு உழைத்த பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை உளமாரத் தெரிவிக்கின்றேன். இந்நூலான "விசாலம்" முதலாவது நூலாக உருவாகி வருடந்தோறும் தொடராகப் பயணிக்க எனது வாழ்த்துக்கள். பிஞ்சுக் குழந்தைகளின் எண்ணங்களையும், ஆசிரியர்களின் ஆற்றல்களையும் வெளிக்கொணரும் முயற்சிக்கு எல்லாம் வல்ல இறைவனின் அருளாசிகள் சித்திக்க வேண்டுகின்றேன்.

திருமதி ஜெயறஞ்சினி மயில்வாகனம்
ஆ.ஆலோசகர் ஆரம்பக்கல்வி
(வலிகாமம் கல்வி வலயம்)

# ஆசிச்செய்தி



மல்லாகம் கிராமத்தில் பல ஆரம்பப் பாடசாலைகள் மத்தியில் சீரும் சிறப்பும் பெற்று விளங்கும் விசாலாட்சி வித்தியாசாலை புகழ் பூத்த பல அறிஞர்களை உருவாக்கியுள்ளது.

"எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற வள்ளுவரின் திருவாக்கிற்கு அமைவாக இப்பாடசாலை அறிவுத்தேடலில் ஆர்வமுடைய மாணவர்களின் அறிவுப்பசியைத் தீர்க்கும், வெளிக்கொணரும் வகையில் சிறப்புடன் செயற்பட்டு வருகின்றது. மாணவரின் விசாலம் சஞ்சிகை மேலும் கற்றல் செயற்பாடுகளை வலுவூட்டுவதாக அமைகின்றது.

இச்சஞ்சிகையானது மாணவர்களின் அறிவுத் தேடல் புத்தாக்கத்திறன், தன்னம்பிக்கை ஆகியவற்றைப் புலப்படுத்துவதாக அமைகின்றமை பாராட்டத்தக்கதாகும்.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் உயர்ச்சிக்காகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் யாவரையும் பாராட்டி வாழ்த்துவதுடன் விசாலம் சஞ்சிகை மேலும் சிறப்புடன் தொடர்ந்து வெளிவர எனது நல்லாசிகளை வழங்குகின்றேன். அத்துடன் இச்சஞ்சிகையை உருவாக்கச் செயற்பட்ட அனைவருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.

ந.மகேஸ்வரன்,
ஓய்வுநிலை அதிபர்
யா/மல்லாகம் விசாலாட்சி
வித்தியாசாலை

# வாழ்த்து மடல்



மல்லையம் பதி திகழ் விசாலாட்சி வித்தியாசாலை
பல்லாண்டு புகழ் பெற்ற ஆரம்பப் பாடசாலை
கல்வி கலை கலாச்சாரம் மிளிர்ந்திடும் சோலை
வல்லமைகள் மேலும் பெற வாழ்கவே! வாழியவே!

நிலைபேறுடைய உன்னதமான சமூக முன்னேற்றத்திற்குக் கல்வியே உயர் கருவியாகும். அக்கல்வியைப் பெறுவதற்கு இன்று எமது சமூகம் பல சவால்களைச் சந்தித்து வருகின்றது. இடப்பெயர்வுகள், சீரற்ற முகாம் வாழ்க்கை, வாழ்க்கைச் சுமை, வன்முறைகள், அடக்கு முறைகள், காணாமற் போதல்கள், சிறுவர் துஸ்பிரயோகங்கள், போதைப் பொருட் பாவனை, மனித உரிமை மீறல்கள் எனப் பலவாறாக மக்கள் படும் வேதனை மிகுந்த வாழ்க்கையில் சிறுவர்களின் எதிர்காலம் எவ்வாறு அமையுமோ என்ற மன ஆதங்கத்தின் மத்தியில் சமூகத்தின் நல்விருத்திகளுக்குக் கண்ணாக விளங்குவது பாடசாலைகளே ஆகும்.

அவ்வகையில் பிரதான வீதியருகே அமைந்துள்ள யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையின் கல்விப்பணி உண்மையிலேயே போற்றுதற்குரியதாகும். இதற்காக உழைத்த, உழைக்கின்ற சமூகச் சிற்பிகளும் காலக்கண்ணாடிகளுமான ஆசிரியர் குலத்தினர் பாராட்டுக்கும் வாழ்த்துக்கும் உரியவர்கள் ஆகும்.

**"ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தலே கோடி புண்ணியம் தரும்"**

பாட்டுத் தலைவன் பாரதியின் இக் கூற்றுக்கிணங்க, கல்வித் துறையிலே முதற்கண் எழுத்தறிவித்து கல்வியையும் இணைப் பாடச் செயற்பாடுகளையும் நல்லொழுக்கம் பண்பாடுகளுடன் இணைத்துப் புகட்டி இயங்கிவரும் இந்த ஆரம்பப் பாடசாலை உன்னத நிலையினைத் தக்கவைத்தும் மேலும் விருத்திகளில் கால்பதித்தும் வருவது பாராட்டப் படவேண்டிய ஒன்றேயாகும்.

**"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து"**

என்றாற் போல் ஆரம்பக்கல்வியின் பங்கு வாழ்நாள் கல்வியில் பெரும் பங்கை வகிக்கின்றது. அத்தகைய பங்களிப்பைச் சீர்செய்து சிறார்களைத் தகுந்த ஆற்றல்களுடன் வெளியனுப்பும் பாடசாலையாக இப்பாடசாலை திகழ்வதில் அதிபரும் ஆசிரியர்களும் பெற்றோரின் ஒத்தழைப்புக்களுடன் ஆற்றிவரும் தன்னலமற்றதும் அர்ப்பணிப்பு மிக்கதுமான விசாலமான சேவைகளைப் பாராட்டுவதுடன், பரிசில் அளிப்பு விழாவிலே வெளியிடப்படுகின்ற "விசாலம்" எனும் புனிதமலரில் வாழ்த்துச் செய்தியளிக்க கிடைத்த சந்தர்ப்பத்திற்கு நன்றிகள் கூறி, அன்று செவ்வந்தி நாதர் அவர்கள் ஆரம்பித்து வைத்த இப்பாடசாலை என்றென்றும் கல்வி மற்றும் பௌதிக வளங்களால் மேன்மேலும் வளர்ச்சி பெற இறைவனை இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

**வளர்க நலமுடன்! வாழ்க வளமுடன்!**

**திரு.திருச்சி.நவரத்தினம்**
**முன்னாள் அதிபர் (2010/2011)**
**யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை**

## தமிழைச் சரிவர எழுதுங்கள்

என்றும் அழியமுடியாத இனிய தமிழை, செந்தமிழ் மொழியை தெரிந்தோ தெரியாமலோ தமிழரே அழிக்கலாமா? தமிழில் 247 எழுத்துக்களே உள்ளன. ஆனால் இப்போ மூன்று எழுத்துக்கள் உருமாறி மொத்தம் 250 எழுத்துக்களாக்கியது மிகத்தவறு.

அதாவது, மெய்யெழுத்துக்களில் உள்ள 'ர்' என்பதை இப்போ 'ர்' என்றும் எழுதுகிறார்கள். உயிர்மெய்யெழுத்துக்களான ரி, ரீ ஆகியவற்றை இப்போ ரி, ரீ என்றும் எழுதுகிறார்கள். இப்பிழைகள் இப்போ பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் நூல்கள் போன்றவற்றிலும் இடம்பெறுவதுடன், ஆசிரியர்கள் மாணவர்கள் கூட பிழையைக் கவனியாது பழகிவிட்டார்கள். தட்டச்சிலோ, கணனியிலோ ர், ரி, ரீ என்பவற்றை அச்சிட முடியும். எனவே சரிவர எழுத்துக்களை எழுதுவதில் (குறிப்பாகப் பாடசாலைகள்) கவனஞ்செலுத்துங்கள்.

நன்றி.

# ஆசிச் செய்தி



இலங்கைத் தீவின் வடபாலமைந்த வட மாகாணத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள கிராமம் மல்லாகம் ஆகும். இதில் மல்லாகம் மத்தியில் அமைந்துள்ள இரு பாடசாலைகளுள் ஒன்றாக மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை அமைந்துள்ளது.

இவ் விசாலாட்சி வித்தியாசாலை எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என்பதற்கு வலுவான ஆதாரங்கள் இல்லாத போதிலும் 19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் 1893 வரை திண்ணைப் பள்ளியாக சுன்னாகத்தைச் சேர்ந்த செவ்வந்திநாதர் சின்னப்பா என்பவரால் ஆரம்பிக்கப்பட்டு அவரது சகோதரன் சுவாமிநாதன் (சீனியப்பா) என்பவரால் நடாத்தப்பட்டதாக அறிய முடிகின்றது. இதனால் இன்றும் பெரியவர்கள் "சீனியப்பா பள்ளிக்கூடம்" என அழைக்கின்றனர். இக்காலப் பகுதியில் இலக்கண வித்துவான் கணேசையர் அவர்கள் ஆசானாக இருந்து தமிழையும் சைவத்தையும் கற்பித்து வந்தார்.

பின்னர் வன்னித்தம்பி செல்லப்பா என்னும் பெரியார் 1915ம் ஆண்டு காங்கேசன்துறை வீதியில் 7வது மைல் கல் பகுதியில் தனக்குச் சொந்தமான இடத்தில் துணைவியார் விசாலாட்சியின் பெயரால் தற்போதுள்ள பாடசாலையை அமைத்து முதன்மையாளராக வழிநடத்தி வந்தார். இவரின் மறைவின் பின் இவரது மகன் வைத்திய கலாநிதி வன்னியசேகரம் அவர்கள் பொறுப்பேற்று நடாத்தி வந்தார். 1951 ஆம் ஆண்டு தனது மகள் நவமணி நினைவாக 46 x 16 அடி அளவுள்ள மண்டபத்தைக் கட்டி உதவினார். தொடர்ந்து வழக்கறிஞர் எம்.எஸ்.சுப்பிரமணியம், விவாகப் பதிவாளர் ரி.பொன்னம்பலம் ஆகியோர் வழிநடாத்தி வந்தனர். 1960ம் ஆண்டு காலத்தில் கல்வி மறுமலர்ச்சியின் பொழுது அரசு பொறுப்பேற்றுக் கொண்டது.

இதன் பின்னர் 1971இல் 40 x 20 அடி அளவுள்ள பாலர் வகுப்பு கட்டிடமும் 1982, 1983 காலப்பகுதியில் ஓலைக் கட்டிடங்கள் ஓடுகள் பொருத்தப்பட்டு புதுப்பொலிவு பெற்றது. இப்பாடசாலை

ஆரம்பத்தில் மல்லாகம் மத்திய தமிழ்க்கலவன் பாடசாலை என அழைக்கப்பட்டதாகவும் அறிய முடிகின்றது.

இவ்வாறு காலத்திற்குக் காலம் சிறந்த முறையில் இயங்கி வந்த இப்பாடசாலை தற்போது அதிபராகவுள்ள திருமதி.ஏனெஸ்ற் சண்முகநாதன் அவர்களின் வழிகாட்டலில் வித்தியோதய பாலர் பாடசாலையும் தரம் 1 – 5 வரையான வகுப்புக்களும் நடாத்தப்பட்டு வருவதுடன் காலத்திற்குக் காலம் 5 ஆந் தரப் புலமைப்பரிசில் பரீட்சையிலும் கணிசமான அளவு மாணவர்கள் சித்தியடைந்து வருவதுடன் சிறப்பான ஆரம்பக்கல்வியையும் பெற்று மாணவர்கள் கல்வியிலும் ஏனைய துறைகளிலும் சிறந்து விளங்குகின்றனர். இவ்வாறு பல வழிகளிலும் இப்பாடசாலைச் சமூகம் தொடர்ந்தும் சிறந்து விளங்கவும் உயர்ச்சி பெறவும் மல்லாகம் பழம்பதி விநாயகர் அருள் புரிவாராக.

**இளையதம்பி கங்காதரன்**
**கிராம உத்தியோகத்தர்**
**a h/213 மல்லாகம் மத்தி**

# வாழ்த்துச் செய்தி



எங்கள் யாழ் மண்ணில் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பித்து வைத்தவர்களை நாம் மறந்துவிட முடியாது. அந்த வகையில் யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை 1893ம் ஆண்டு காலப்பகுதியில் திண்ணைப் பள்ளியாக செவ்வந்திநாதர் சின்னப்பரால் ஆரம்பிக்கப்பட்டு அவரது சகோதரர் சீனியப்பாவால் நடத்தப்பட்டு வந்துள்ளது.

இதன் பின்னர் 1915ம் ஆண்டு வன்னித்தம்பி செல்லப்பா என்னும் பெரியார் காங்கேசன்துறை வீதியில் 7வது மைலில் அமைந்துள்ள தமது சொந்தக் காணியில் தமது துணைவியாரின் பெயரான விசாலாட்சி என்னும் பெயரை இப்பள்ளிக்குச் சூட்டி தற்போதைய கல்விக் கூடத்தை நிறுவினார்.

குறிப்பிட்டுச் சொன்னால் இங்கு ஆரம்பக்கல்வி கற்றவர்கள் பலர் அரச, தனியார் நிறுவனங்களிலும் அரச உயர் பதவிகளிலும் இருப்பதும் நற்பிரஜைகளாக வாழ்வதும் இப்பாடசாலையின் பெருமையைப் பறைசாற்றி நிற்கின்றது.

வலிகாமம் வடக்கில் தரம் உயர்ந்த ஒரு ஆரம்ப பாடசாலையாக விளங்குவது குறிப்பிடத் தக்கது. வழிபாட்டுத் துறையிலும், விளையாட்டுத் துறையிலும், கல்வித் துறையிலும் மிகவும் அக்கறை காட்டி வருகின்ற இன்றைய அதிபரையும், ஆசிரியர்களையும், பாடசாலைச் சமூகத்தையும் மனமுவந்து பாராட்டுவதோடு சகல செயற்பாடுகளிலும் மாணவர்களை நன்நெறிப்படுத்தி நற்பிரஜைகளாக ஆக்கவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

செ.சிவபாலரத்தினம்
ஓய்வுபெற்ற ஆசிரியர்
யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை.

# என் உள்ளத்திலிருந்து



யாழ் மண்ணில் பிரதான வீதிகளில் ஒன்றாகிய காங்கேசன்துறை வீதியில் புகழ் மிகப் பெற்ற மல்லாகம் பதியில் அமைந்துள்ள எமது பாடசாலை நூற்று இருபது ஆண்டுகள் கடந்த பழமை வாய்ந்ததாகும். இப்பாடசாலையின் பழைமைகள், புதுமைகள், சாதனைகள், படைப்புக்கள் என்பவற்றை ஓர் ஆவணமாக்க வேண்டுமென்ற எண்ணங்கொண்டு இன்று அது மலராவதில் மகிழ்வடைகின்றேன்.


**"மனம் வெறும் நினைவுகளின் குவியல்**
**மட்டுமல்ல அது விழிப்புணர்விற்கான வாயிற்கதவு"**

என்பதற்கிணங்க மனதில் எழுந்த சிந்தனைகளைச் செயல்வடிவமாக்கி "விசாலம்" எனும் மலராக இப்பாடசாலையில் வெளிவரும் முதல் மலராகவும் உள்ளமையால் இது தொடர் நடைபோட இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சிறு பாடசாலையாக இருந்தாலும் எமது பாடசாலை மாணவர்களின் ஆக்கங்கள், திறமைகள், சாதனைகள் வெளிக் கொண்டுவரப்பட வேண்டுமென்று எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றி பெற உதவிகள், ஒத்தாசைகள் வழங்கிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

வாழ்க விசாலம்!
வளர்க விசாலம்!

**திருமதி ஏனெஸ்ற் சண்முகநாதன்**
அதிபர்
**யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை**



# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி



யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை ஆரம்பிக்கப்பட்டு நூற்றாண்டு காலங்களாகி விட்டன. எனினும். பாடசாலையின் வரலாறு தொடர்பான ஆவணங்கள் காலத்தின் சூழ்நிலையால் அழிந்தொழிந்து போயுள்ளன. இந்த வகையில் பாடசாலையின் பெருமைகளையும் வரலாற்றையும் பேண வேண்டும் என்ற ஆவலினால் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து "விசாலம்" என்ற நூலினை வெளிக்கொணர்ந்துள்ளனர்.

இந்நூலின் கண்ணே பாடசாலையின் வரலாறு, பெருமைகள், மாணவர் ஈட்டிய வெற்றிகள், மாணவர்களது ஆக்கங்கள் என்பன நிறைந்துள்ளன. வருங்கால மாணவ சமூகம் இந்நூலினைப் படித்து நூலின் வழி நிற்க எனது நல்லாசிகள் உரித்தாகட்டும்.

**திருமதி. மைதிலி சிவநாதன்**
**பிரதி அதிபர்**
**யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை**

# மலராசிரியரின் உள்ளத்திலிருந்து ...



இந்து சமுத்திரத்தின் முத்து எனப் பெயர் பெற்ற இலங்கைத் திருநாட்டின் சிகரமாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் மல்லாகம், காங்கேசன்துறை வீதியில் யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை அமைந்துள்ளது. ஆரம்பக் கல்விக்கு உறுதியான அடித்தளமிட்டு கல்விப் பணியினைச் சிறப்புடனே முன்னெடுத்துச் செல்லும் பாடசாலைகளுள் எமது பாடசாலையும் ஒன்றாகும். இத்தகைய சிறப்புமிக்க இப்பாடசாலை இன்று 120 ஆண்டுகளைப் பூர்த்திசெய்து தொடரும் ஆண்டில் தனது கால் பதித்து வெற்றிக்களிப்பில் இருக்கும் வேளை முதலாவது "விசாலம்" மலர விசாலமாக மலர்ந்து மணம் பரப்பி நிற்பதில் பேருவகை அடைகின்றேன்.

எமது பாடசாலைக்கு அயலிலுள்ள வசதி படைத்தவர்கள், படித்தவர்கள் தமது பிள்ளைகளைப் பெரிய பாடசாலைகள், நகர்ப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்க அனுப்பிக் கொண்டிருக்கும் வேளை அடிப்படை வசதிகள், பொருளாதார வசதிகள், போக்குவரத்து வசதிகள் எனப் பல்வேறுபட்ட வசதிகளின்மைக்குள் தத்தளிக்கும் பாடசாலையாக எமது பாடசாலை விளங்கி நிற்கின்றது.

சிறிய தொகை மாணவர்களைப் பாடசாலை தன்னகத்தே கொண்டிருந்தாலும் எம்மாணவர்களும் சாதனை படைத்துக் கொண்டிருக்கின்றார்கள். விளையாட்டு, இணைபாடவிதானச் செயற்பாடுகளில் பெற்றுக் கொண்டிருக்கும் திறமைகளும், கல்வியின் முன்னேற்றங்களையும் விசால மலரின் இதழ்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. சாதனைகள், திறமைகள். ஆக்கபூர்வமான செயற்பாடுகள், பெரியோர், மூத்தோர், ஆசிரியர்கள், மாணவர்களின் ஆக்கச் சிந்தனைகளும் கல்விசார் கருத்துக்களும் மலரிதழ்களை அலங்கரித்துக் கொண்டிருப்பதோடு பலருக்கும் பயன் கிடைக்கும் வண்ணம் இம்மலர் மலர்ந்துள்ளது என்பது திண்ணம்.

எதிர்காலச் சந்ததியினருக்குப் பாடசாலை வரலாற்றினைத் தொகுத்து ஆவணப்படுத்தும் விருப்பம் எமது அதிபருக்கு ஏற்பட்டமையினால் அனைவரும் ஒன்று சேர்ந்து இம்மலரினை மலரச் செய்தோம்.

விசாலம் மலர்
விரும்பும் மலராகி
விரிந்து மணம் பரப்ப
இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி நந்தினி தர்மதயாளன்**
**ஆசிரியை**
**யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை**

## சிந்தனை முத்துக்கள்

| | | |
|---|---|---|
| 01. | முதலில் வணங்க வேண்டிய தெய்வம் | - தாய் தந்தை |
| 02. | மிக மிக நல்ல நாள் | - இன்று |
| 03. | மிகப்பெரிய வெகுமதி | - மன்னிப்பு |
| 04. | மிகவும் வேண்டியது | - பணிவு |
| 05. | மிகவும் வேண்டாதது | - வெறுப்பு |
| 06. | மிகப்பெரிய தேவை | - நம்பிக்கை |
| 07. | மிகக்கொடிய நோய் | - பேராசை |
| 08. | மிகவும் சுலபமானது | - குற்றங்காணல் |
| 09. | கீழ்த்தரமான விடயம் | - பொறாமை |
| 10. | நம்பக்கூடாதது | - வதந்தி |
| 11. | ஆபத்தை விளைவிப்பது | - அதிக பேச்சு |
| 12. | செய்யக்கூடாதது | - நம்பிக்கைத்துரோகம் |
| 13. | செய்யக்கூடியது | - உதவி |
| 14. | விலக்க வேண்டியது | - சோம்பேறித்தனம் |
| 15. | உயர்வுக்கு வழி | - உழைப்பு |
| 16. | நழுவ விடக்கூடாதது | - வாய்ப்பு |
| 17. | பிரியக்கூடாதது | - நட்பு |
| 18. | மறக்கக்கூடாதது | - நன்றி |

# அதிபர் அறிக்கை

எமது பள்ளிதனைச் செவ்வனவே நடத்திச் செல்லத் துணைபுரியும் இறைவனை வேண்டி நிற்பதோடு, இப்பாடசாலையின் ஸ்தாபகரான செவ்வந்திநாதன் அவர்களின் நினைவு கூறி பரிசில் அளிப்பு விழாக்காணும் இந்நன்னாளில் நூற்று இருபத்து ஒன்று (121) ஆண்டுகள் காணும் இப்பாடசாலையில் முதல் முறையாக மலர் ஒன்றை வெளியிடுவதில் மகிழ்வுற்று எனது அறிக்கையை சமர்ப்பிக்கின்றேன்.

பிள்ளை நேயப் பாடசாலையாக அமையும் இப்பாடசாலை வளர்ச்சிப் போக்கைக் கண்டு வருவதோடு, மாணவர் நேசிக்கின்ற பாடசாலையாகவும், பிள்ளை நேயப் பாடசாலைக்குரிய பரிமாணங் களைத் தன்னகத்தே கொண்டமையும் பாடசாலையாகவும் திகழ்கின்றது. இவ்வாண்டு அறிக்கைதனைப் பிள்ளை நேயப் பாடசாலைக்குரிய பரிமாணங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

**உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு உயிரோட்டமான வகையில் உட்படுத்தல்.**

எமது பாடசாலைக்கு வரும் அனைத்து மாணவர்களுக்கும் கற்றலுக்கு ஏதுவான சூழலை உருவாக்குதலும் இடை விலகாத வகையிலும், வரவு வீதத்தை அதிகரிப்பதற்கான நடைமுறைகளைப் பாடசாலை மட்ட வரவுக்குழு கண்காணித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. மாணவர்கள் கற்றலை மகிழ்வுடன் கற்கவும், துன்புறுத்தலின்றி தவறுகளை உணர்த்தவும் ஆசிரியர்கள் தம்பணிதனைச் செவ்வனே ஆற்றி வருகின்றனர். கல்வி இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் மாணவர்கள் வேறுபாடுகளின்றி செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. பாடசாலைக்கு அனுமதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரிப்பதை அவதானிக்கக்கூடியதாய் உள்ளது.

மாணவர் சேர்வு எண்ணிக்கை

| ஆண்டு | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|
| எண் | 13 | 21 | 25 | 25 | 26 |

மாணவர் வரவு வீதம்

| ஆண்டு | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|
| வரவு வீதம் | 89% | 88% | 87% | 89% |

## ஆண், பெண் சமூகவியல்புகளில் கவனம் செலுத்தல்

பாட, இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் ஆண், பெண் வேறுபாடின்றிக் கற்பதுடன், தலைமைத்துவப் பங்களிப்புக்களிலும் ஆண், பெண் வேறுபாடின்றிப் பங்குபற்றி வருகின்றனர். மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் பால் நிலை சமத்துவம் பேணப் படுகின்றது. மாணவர் தலைமைத்துவம், காலைப்பிரார்த்தனைகளிலும் ஆண், பெண் சமத்துவத் தன்மை பேணப்பட்டுவருகின்றது.

## பிள்ளைகளின் கற்றற் பேறுகளை விருத்தி செய்தல்.

தரமான கல்வியை வழங்கி தரமான கல்விச் சமூகத்தை உருவாக்கல் என்ற எமது பாடசாலை நோக்கக் கூற்றை அடிப்படையாகக் கொண்டு வகுப்பறைமட்டக் கவின் நிலைப்படுத்தல், மாதிரி வினாத் தாள்கள், மாதாந்தப் பரீட்சைகள், கற்றல் ஊக்கிகள் என்பன நடைமுறைப்படுத்தப்படுவதோடு செயன்முறை ரீதியான கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்கப்படுவதாலும் எமது மாணவர்கள் கல்வித்தரம் வளர வழியமைக்கப்படுகின்றது. தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வருடாவருடம் சாதனைகள் நிலைநாட்டப்படுவதோடு அடிப்படைத் தேர்ச்சியான 70 புள்ளிக்கு மேலாகவும், 100 புள்ளிகளுக்கு மேலாகவும் பெறும் மாணவர்களின் சதவீதம் அதிகரிப்பதை அவதானிக்க முடிகின்றது. இவ்வருடம் 70 புள்ளிக்கு மேல் 92% சதவீதமானோர் அடைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

எமது பாடசாலை சிறிய பாடசாலையாக இருப்பினும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் தனக்கெனச் சாதனைகளை நிலை நாட்டுவதும் குறிப்பிடத்தக்கது. இம்முறை குறிப்பாக சிறுவர் அரங்கு கோட்டமட்டத்தில் 2ஆம் இடத்தைப் பெற்று வலய மட்டத்திற்கு பங்கு பற்றும் வாய்ப்பைப் பெற்றதோடு, விரைவு கணிதப் போட்டியில் தரம் 02 மாணவன் வலய மட்டத்தில் 1ஆம் இடம் பெற்று மாகாண மட்டத்திற்கு செல்லும் வாய்ப்பும் கிடைக்கப்பெற்றதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இவை தொடர்பான விபரங்கள் காட்டப்பட்டுள்ளன.

## மாற்றலாகிச் சென்ற ஆசிரியர்களின் பணி

எமது பாடசாலையின் கல்வி இணைப்பாடவிதான செயற்பாடுகளில் தமது அர்ப்பணிப்புடன் சேவையாற்றி இடமாற்றலாகிச் சென்ற திருமதி.ஜெ.பாலகிருஸ்ணராஜா, திருமதி. கௌ.சிவசுதன்

ஆசியர்களை மனம் நிறைவாக வாழ்த்துகின்றேன். அவர்களின் சேவைக்காலப்பகுதியில் பாடசாலை வளர்ச்சிக்காகப் பணியாற்றிய சந்தர்ப்பங்களுக்காக நன்றி கூறுவதோடு அவர்கள் சேவை, சென்ற பாடசாலைகளிலும் சிறக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**இடமாற்றம் பெற்று வந்த ஆசிரியர்கள்**

எமது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிலும், இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் எம்மோடு இணைந்து பணியாற்ற இடமாற்றம் பெற்று வருகை தந்த திரு.ச.கண்ணன், திருமதி.யோ.வ.தயாளன் ஆசிரியர்களை வரவேற்பதோடு எமது பள்ளியின் வளர்ச்சிக்காக தம் பணிதனை மேற்கொள்ள வேண்டுமென வேண்டி நிற்கின்றேன்.

**கற்றல் கற்பித்தலில் பிற உதவிகள்**

கடந்த இரு வருட காலமாக சமாதானத்திற்கும் நல்லிணக்கத் திற்குமான பணியகத்தினால் இலவச புலமைப்பரிசில் வகுப்புக்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்க விடமாகும். இவர்களின் தன்னலமற்ற சேவையானது தொடர வேண்டுமென வேண்டி நிற்கின்றேன்.

**ஆசிரியர்களின் சாதனை**

இவ்வருடம் நடைபெற்ற வலயமட்ட ஆசிரியர் தினவிழாவில் எமது பாடசாலை ஆசிரியரான திருமதி.ந.தர்மதயாளன் அவர்கள் சிறந்த ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை மகிழ்வைத் தருகின்றது. இவரது சேவை தொடர வாழ்த்துகின்றேன்.

**பிள்ளைகளின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தல்**

மாணவர்களின் ஆரோக்கியமும், பாதுகாப்பும் கற்றலை மேற்கொள்ளத் துணைபுரிகின்றது. மாணவர்களின் ஆரோக்கியத்தைப் பேணுவதோடு உலக உணவுத்திட்ட வேலைத்திட்டமும், போசணை நடவடிக்கையும் நடை பெறுகின்றது. மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள சுகாதாரப் பரிசோதகர்களினதும், வைத்திய அதிகாரிகளின் சேவையும் இன்றியமையாததாகும். போக்குவரத்துப் பாதுகாப்பை வழங்குவதில் பொலிஸ் அதிகாரிகளின் சேவையும் துணை புரிகின்றது. பாடசாலைக்கழிவுகளை அகற்றுவதற்கு பிரதேச சபை உத்தியோகத்தர்கள் தமது சேவையை வழங்கிவருகின்றனர்.

சுற்றாடற் பாதுகாப்புச் சேவைகளில் மாணவர்கள் சுற்றாடற் கழகங்களில் இணைந்து செயற்பாடுகளை நிறைவேற்றுகின்றனர். சுற்றாடற் கழகங்களின் அங்கத்தவர்கள் தமது தேர்ச்சிகளை அடைவதன் மூலம் இவ்வருடம் சுற்றாடல் சார் செயற்பாட்டால் மாணவர்கள் 11 தாவரப்பதக்கம், 14 பறவைப்பதக்கம், 13 இயற்கைப்பதக்கம் என்ப வற்றைப் பெற்றுள்ளனர். பாடசாலைமட்ட சுகாதாரமன்ற நடவடிக் கைகளும் பாடசாலைத்தூய்மையை ஏற்படுத்துகின்றன. இயற்கையான சூழலையும், அழகுணர்ச்சியையும் ஏற்படுத்தும் வகையில் மாணவர், ஆசிரியர்களால் மரக்கன்றுகள் நடப்படுவதுடன், மாவட்ட மட்ட பிரதிப்பணிப்பாளர் மூலம் SOND நிறுவன அனுசரணையுடன் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டது.

**மாணவர் குடும்பம் மற்றும் சமூகத்தின் உயிரோட்டமான பங்களிப்பு**

பாடசாலையும் சமூகமும் ஒன்று பட்டாலே வெற்றியை நிர்ணயிக்கும் என்பதிற்கிணங்க எமது பாடசாலைச்சமூகம் தன்னால் இயன்ற அர்ப்பணிப்புக்களை வழங்கி வருவது மகிழ்வைத் தருகின்றது. பாடசாலை வளர்ச்சியில் பெற்றோர்கள் காட்டிவரும் ஒத்துழைப்புக்கள் அன்பளிப்புக்கள் பாடசாலை வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிகின்றன. மாணவர்களால் வகுப்பறைத் தேவைக்காக வழங்கப்படும் அன்பளிப்புப் பொருள்களும் வகுப்பறைமட்டக் கற்றல் கற்பித்தலை வளர்க்க உதவுகின்றன.

எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கம், அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் தம்மாலான சேவையை ஆற்றி வருகின்றனர். பாடசாலை விழாக்கள் முக்கிய நிகழ்வுகளில் பாடசாலைமட்டக் கற்றல் கற்பித்தல் சேவைக்கும் தம்மால் இயன்ற பணியை ஆற்றி வருகின்றனர். நலன்விரும்பிகளின் சேவையும் உதவிகளும் பாடசாலை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி புரிகின்றன.

வருடா வருடம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்தும் மாணவர்களுக்கு எமது முன்னாள் அதிபர் திரு.தி. நவரத்தினம் அவர்கள் அன்பளிப்பை வழங்கி வருவதும் சிறப்பிற்குரிய விடயமாகும். அவரது சேவை தொடர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

எமது பாடசாலையின் தேவை கருதி வருடா வருடம் எமது பரிசில் அளிப்பு விழாவிற்கு அன்பளிப்பு வழங்கும் லயன்ஸ்கழகம், மல்லாகம் கிளைக்கும் அவர்களோடு இணைநின்று பணிபுரியும் ஓய்வு

பெற்ற வங்கி முகாமையாளர் திரு.S.விக்கினராஜா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு அவர்களின் சேவை தொடர வேண்டுமென வேண்டி நிற்கின்றேன்.

எமது பள்ளியின் தேவைகளை அறிந்து தமது சேவையை, வலயக் கல்வி சார் உத்தியோகத்தர்களும், கோட்டக்கல்வி சார் உத்தியோகத்தர்களும் நல்கி வருவது பாடசாலையின் தேவைகளைப் பூர்த்தியாக்கக் கூடியதாய் உள்ளது.

**சமூகம்**

**சிசு உதான சேவை**

எமது பாடசாலை மாணவர்களின் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கவும், தமது எதிர்கால கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையவும் மக்கள் வங்கி காங்கேசன்துறை கிளையினால் நடைமுறைப்படுத்துவதும் இச்சேவையில் எமது பள்ளியின் 100 மாணவர்கள் தமது கணக்கை வைத்திருப்பதுடன் நடைமுறைப் படுத்துவதும் குறிப்பிடத் தக்கது ஆகும். இவ்வங்கிச் சேவையின் வளர்ச்சியினால் எமது பரிசில் அளிப்பு விழாவிற்கு வருடாவருடம் அன்பளிப்பு நல்கி வருவது நிறைவைத் தருகிறது. இவர்களது சேவையை நன்றியோடு பாராட்டி நிற்கின்றேன்.

**நன்றிகள்**

எமது பள்ளியின் தேவைகளை அறிந்து பணிபுரியும் வலயக் கல்விசார் உத்தியோகத்தர்களுக்கும், கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்களுக்கும், கோட்டமட்ட கல்விசார் உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

எமது பாடசாலை வளர்ச்சிக்குத் துணை புரியும் பழைய மாணவர், நலன்விரும்பிகள், பெற்றோர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது பள்ளியின் வளர்ச்சிக்காக தமது பணியை அர்ப்பணித்து வரும் ஆசிரியர்களுக்கும், சிறப்பாக இம்மலர் மலர்வதற்கு தமது உடல் உள அர்ப்பணிப்பை வழங்கிய யாவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்து விடை பெறுகின்றேன்.

நன்றி

# பாடசாலைத் தேவைகள்

1. வகுப்பறை வசதி
2. நூலக வசதி
3. நவீன கற்பித்தல் சாதனங்களுக்குரிய அறை
4. கணனிகள்
5. Multimedia
6. அலுமாரிகள் (வகுப்பறை ரீதியாக)
7. ஆரம்பக்கல்வி விளையாட்டு உபகரணங்கள்
8. பாடசாலை எல்லைகள் மதிலாக்கப்படல்
9. அலுவலகம் சீராக்கல்
10. ஆங்கில ஆசிரிய ஆளணி
11. விளையாட்டு மைதானம்

மேற்படி பௌதீக வளங்களும் ஆசிரியவளமும் அவசியம் அளிக்கப்படின் பாடசாலையின் முன்னேற்றத்திற்கு மேலும் வலுவூட்டுவதாக அமையும்.

**சனிநீர் ஆடு :-**

சனி என்பது ஊற்று எனப்பொருளாகும். ஊற்று நீரில் குளி என்பதே முன்னோர் கூறி வைத்த சுகாதாரம் தொடர்பான பழமொழியாகும். இதனை மாற்றி “சனி நீராடு” எனக்கூறி சனிக்கிழமைகளில் குளி என்று அர்த்தமின்றிக் கருதிச் செயற்படுகின்றனர்.

# பாடசாலைத் தகவல்கள்

| | |
|---|---|
| பாடசாலை ஸ்தாபிதம் | - 1893 |
| பாடசாலை குறியீட்டு எண் | - 1013028 |
| பாடசாலை தொகை மதிப்பு எண் | - 09148 |
| பாடசாலை பரீட்சை எண் | - 11428 |
| கிராம சேவையாளர் பிரிவு | - J/213 (மல்லாகம் மத்தி) |
| தேர்தல் தொகுதி | - காங்கேசன்துறை |
| பிரதேச செயலாளர் பிரிவு | - வலிகாமம் வடக்கு |
| முகவரி | - காங்கேசன்துறை வீதி, மல்லாகம். |
| வகை | - தரம் - III |
| வகுப்புக்கள் | - தரம் 01 முதல் தரம் 05 வரை |
| காணி அளவு | - ½ ஏக்கர் |
| மின்சார வசதி | - உண்டு |
| குடிநீர் வசதி | - உண்டு |

# மாணவர் விபரம் - 2014

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 01 | 14 | 12 | 26 |
| 02 | 16 | 09 | 25 |
| 03 | 12 | 15 | 27 |
| 04 | 11 | 10 | 21 |
| 05 | 06 | 07 | 13 |
| மொத்தம் | 59 | 53 | 112 |

# கட்டாயக் கல்விக் குழு

திருமதி. ஏ. சண்முகநாதன் (அதிபர்)
திரு. இ. கெங்காதரன் (கிராம அலுவலர்)
திரு அன்ரன்ரஜீவன் (சமுர்த்தி அலுவலர்)
திருமதி ஜெ. ஜீவானந்தன் (ஆசிரியர்)
திருமதி. எ. தயாவதி
திரு. தி. பிரபாகரன்
திருமதி. தி. ஜெயந்தினி
திருமதி. யூலியஸ் அனிஸ்ராஜ் செல்வமலர்

# தர உள்ளீட்டுக் குழுக்கள்

## கொள்வனவுக்குழு

திருமதி ஏ. சண்முகநாதன் (அதிபர்)
திருமதி ந. தர்மதயாளன் (ஆசிரியர், ஆ.க)
திருமதி ஜெ. ஜீவானந்தன் (ஆசிரியர், ஆ.க)

## மதிப்பீட்டுக் குழு

திருமதி மை. சிவநாதன் (சிரேஸ்ட ஆசிரியர், ஆ.க)
திரு ச. கண்ணன் (ஆசிரியர், ஆ.க)
திருமதி யோ. வ. தயாளன் (ஆசிரியர், ஆ.க)
செல்வன் வி. அனோசன் (மாணவன் - தரம் 5)

# ஆசிரிய ஆளணி

- திருமதி ஏனெஸ்ற் சண்முகநாதன்
  (இலங்கை அதிபர் சேவை – 3)
- திருமதி மைதிலி சிவநாதன்
  (பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி)
- திருமதி ஜெகதீஸ்வரி ஜீவானந்தன்
  (பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி)
- திருமதி நந்தினி தர்மதயாளன்
  (பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி)
- திரு. சண்முகநாதன் கண்ணன்
  (பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி)
- திருமதி யோசப்பின் வதனி தயாளன்
  (பயிற்றப்பட்ட பட்டதாரி)
- செல்வி ஜதார்த்தனி தேவபாலன்
- செல்வி மயூரி தர்மகுலசிங்கம்

**மண்குதிரை நம்பி ஆற்றில் இறங்காதே :-**

“மண் குதிர்” என்பது ஆற்று நீரினுள்ளே மண் குவித்து மலைக்கல் போல் காணப்படுகின்ற “மண்குவியல்” ஆகும். ஆற்றைக் கடக்கும் போது அது மலைக்கல் என நம்பி அதில் கால் வைத்துக்கடக்க முற்பட்டால் அந்த மண் குதிரினுள் புதையுண்டு மாழநேரிடும். இப்பழமொழியில் உள்ள மண்குதிர் என்பதை மண்குதிரை என மாற்றி மண்குதிரையை நம்பி எனக்கூறி அர்த்தமின்றிய பழமொழியாக்கியுள்ளோம்.

## முகாமைத்துவக்குழு



## ஆசிரிய ஆளணி



# தரம் -5 புலமைப்பரிசிற் பகுப்பாய்வு - 2010 – 2014

| மாணவர்கள் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|
| புள்ளி | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
| 000 – 020 | -- | -- | -- | -- | -- |
| 021 – 040 | 00 | -- | -- | -- | -- |
| 041 – 060 | 06 | 05 | 03 | -- | 01 |
| 061 – 080 | 06 | 02 | 05 | 03 | 01 |
| 081 – 100 | 04 | 03 | 03 | 03 | 03 |
| 101 – 120 | 07 | 04 | 06 | 01 | 01 |
| 121 – 140 | 01 | 01 | 02 | 08 | 05 |
| 141 – 160 | 04 | 02 | 03 | 02 | 02 |
| 161 – 180 | 02 | 01 | -- | 03 | -- |
| 181 – 200 | -- | -- | -- | -- | -- |
| தோ. எண் | 25 | 18 | 22 | 20 | 13 |
| சித்தி அ.எண் | 06 | 02 | 01 | 05 | 02 |
| 100 பு.மே.எ | 08 | 07 | 10 | 09 | 06 |
| 70 பு.மே (%) | 84% | 66% | 77% | 90% | 92% |
| 100 மேல் (%) | 56% | 50% | 50% | 70% | 62% |
| சித்தி வீதம் (%) | 24% | 11% | 04% | 25% | 15% |

# புலமைப்பரிசில் பரீட்சையில்
# சித்தி பெற்றோர் விபரம் - 2014

01) விஜயகுமார் அனோசன் - 159

02) லிதகுகன் கலஸ்ரிக்கா - 154

## 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர்

01) எட்வேட் கிளைமென்ற் மேவின் - 139

02) எட்மன் கீர்த்தனா - 135

03) சிவலிங்கம் கம்ஷா - 133

04) சாந்தீபன் பபிஷாந் - 126

05) கஜேந்திரன் கவினயா - 122

06) அகிலேஸ்வரன் பிருந்தா - 114

**அறிஞர்கள் சொன்னவை**

நம்பிக்கை இல்லாத இடத்தில் முயற்சியும் இருக்க முடியாது

ஜான்சன்

இன்றைய எமது கடமையும், இன்றைய நாளும் மட்டுமே நமக்குச் சொந்தமானவை. பலன்கள் எதிர்காலத்தில் நிச்சயிக்கப்படுகின்றன.

ஹொரேஸ் கிரீலே

நான் அதிஸ்டத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறேன். எவ்வளவு அதிகமாகக் கஸ்டப்பட்டு உழைக்கிறேனோ அவ்வளவு அதிகமாக அதிஸ்டமும் என்னிடமும் வந்து சேருகிறது.

ஸ்ரீபன் லீகார்ட

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்

## 2010


ஆ.யானுசன் - 168


ம.சுவேதன் - 162


வி.ஜானுகா - 157


கு.சகஸ்திரா - 150


வி.துஷ்யந்தினி - 147


ம.தனுஜன் - 145

## 2011


பா.அஜிந்தன் - 168


ச.கஜேன் - 151

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்

**2012**



ம.சது - 160

**2013**



ற.கிசாலினி - 165



பி.நித்தியப்பிரசாத் - 164

**2013**



பா.தீபனா - 163



ச.சஜீன் - 156



ம.தனுஜன் - 145

**2014**



வி.அனோசன் - 159



லி.கலஸ்ரிக்கா - 154

# பாடசாலை வரலாறு

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் எழில் கொஞ்சும் அழகுடைய ஊராகிய மல்லாகத்தில் அமைந்துள்ள யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை மிகவும் பழமை வாய்ந்ததாகவும் பல நல்ல மனிதர்களை உருவாக்கிய கல்விச் சாலையாகவும் திகழ்கிறது.

இப்பாடசாலையின் ஆரம்பகாலம் திட்டவட்டமாகக் கூற முடியாது விட்டாலும் 1893 ஆம் ஆண்டளவில் ஸதாபிக்கப்பட்டது என வரலாற்று ஆதாரங்கள் கூறி நிற்கின்றன. ஆரம்பத்தில் ஒரு திண்ணைப்பள்ளியாக செவ்வந்திநாதர் சின்னப்பரால் ஆரம்பிக்கப்பட்டு அவரது சகோதரர் சீனியப்பாவால் நாடாத்தப்பட்டு வந்துள்ளது. இதன் பின்னர் 1915 ஆம் ஆண்டு வன்னித்தம்பி செல்லப்பா எனும் பெரியார் காங்கேசன்துறை வீதியில் 7வது மைலில் அமைந்துள்ள தமது சொந்தக் காணியில் துணைவியாரின் பெயர் கொண்டு தற்போதைய இக் கல்விக் கூடத்தினை நிறுவினார்.

இதன்பின்னர் வன்னியசேகரம் இதனைப் பொறுப்பேற்று தனது மகள் நினைவாக 46 x 16 அளவுள்ள மண்டபம் ஒன்று கட்டினார். வழக்கறிஞர் எம்.எஸ்.சுப்பிரமணியம் சி.பொன்னம்பலம் என்போரது முகாமைத்துவத்துடன் இயங்கி 1960ஆம் ஆண்டில் கல்வி மறுசீரமைப்பின் கீழ் பாடசாலை அரசுடமையாக்கப்பட்டது.

1982, 1983 காலப்பகுதியில் கிடுகுக் கூரைகளாக இருந்த மண்டபங்கள் யாவற்றுக்கும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தால் ஓடுகள் போடப்பட்டன. தொடர்ந்து 1994ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரதான மண்டபம், சிறுவர் பூங்கா, மலசல கூடம், வகுப்பறைகள், நீர்க்குழாய் இணைப்புக்கள் அமைக்கப்பட்டன. மேலும் இக்காலப்பகுதியில் தான் பாடசாலை முகப்புப் பெயர் வளைவு, பான்ட் வாத்தியக் கருவிகள் பாடசாலை நலன் விரும்பிகளால் கிடைக்கப்பெற்றது. 2004 ஆம் ஆண்டு புதிய வகுப்பறைகள் பாடசாலை எல்லைக்குள் ஒரு சீருக்குக் கொண்டு வரப்பட்டன. 2010 ஆம் ஆண்டு கணனி அறை அமைக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு பாடசாலை முற்புற மதில் அமைக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் Photo பிரதி இயந்திரம், OHP இயந்திரம் என்பன கிடைக்கப் பெற்றன. 2013 ஆம் ஆண்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உதவியால்

களஞ்சிய அறை அமைக்கப் பட்டதுடன் சமையல் கூடம், ஏனைய கட்டடங்கள் திருத்தப்பட்டன.

இப்பாடசாலை காலத்துக்குக் காலம் பௌதீக வள விருத்தியில் வளர்ச்சி கண்டு வந்ததுடன் பாட, இணைப்பாடவிதான செயற்பாடுகளில் தனது சாதனைகளை நிலைநாட்டி வருகின்றது. தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையிலும் ஒவ்வொரு வருடமும் குறிப்பிடத்தக்களவு மாணவர்கள் சித்தியடைந்து வருவதுடன் தமது கல்வி அடைவு மட்டத்தையும் உயர்த்தி வருகின்றனர்.

வரலாறு மிக்க இப்பாடசாலையில் அதிபர்களாக வி.எ.தேவதாசன், ஏ.கே.சின்னத்தம்பி, ஏ.பொன்னையா, ஈ.சபாரத்தினம், கே.நாகரத்தினம், வி.கனகசபாபதி(1971 – 1990), க.நடராசா(1990 – 1993) திருமதி க.சுப்பிரமணியம், க.மகேஸ்வரன் (1994 – 2004) கு.இராசநாயகம் (2004 – 2010) தி.நவரத்தினம் (2010 – 2011) ஆகியோர் கடமையாற்றி, தற்போது அதிபராக திருமதி ஏனெஸ்ற் சண்முகநாதன் 2011 ஆம் ஆண்டிலிருந்து கடமையாற்றி வருகின்றார்.

காலம் பல கடந்த இப்பாடசாலையின் வளர்ச்சிக்குப் பாடசாலையில் இடப்பற்றாக்குறை, வகுப்பறை நெருக்கடிகள், சுற்றுச்சூழல் எல்லைகள் சீராக்கப்படாமை, நவீன கற்பித்தல் சாதனங்கள் போதாமை போன்றவையும் காணப்படுகின்றன. இப்பாடசாலை தனது வளர்ச்சியினைப் பெற்று ஓங்கி வளர்வதற்கு இத் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

பிள்ளை நேயப் பாடசாலையாகத் திகழும் இப்பாடசாலை தற்போது 5 நிரந்தர ஆசிரியர்களுடனும் 112 மாணவர்களுடனும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளினை முன்னெடுத்துச் செல்கின்றது. 121 வது ஆண்டில் “விசாலம்” மலரினை மலரச் செய்து வரலாறு, வெற்றிகள், சாதனைகள், தேவைகள், சேவைகள் என விரித்துரைக்கப்பட்ட இம் மலர் மூலம் விடயங்களை நுகர்ந்து கொள்ள முடியும் என எண்ணுகின்றோம்.

பாடசாலைச்சமூகம்



## மாணவர்கள் - 2014



# உணவுக் கட்டுப்பாட்டை கடைப்பிடிப்பது எவ்வாறு?

01. வீட்டில் அனைவருக்கும் பொருந்தக் கூடிய வகையில் ஏதேனும் கலவையை உணவாக தயாரிக்கலாம். அதில் மாச்சத்து, புரதம், கொழுப்பு, தாது, விற்றமின் போன்ற சத்துக்கள் அடங்கியிருக்க வேண்டும்.

02. கலவையில் மாச்சத்து அடங்கியிருக்க வேண்டும். அதிக நாருடைய, மாச்சத்துள்ள உணவு வகைகளிலேயே அதனைப் பெற்றுக் கொள்ள முடியம். அதிக நாருடைய உணவின் ஊடாக பசி உணரப்படுதல் தாமதிக்கபடுகின்றது.
நார் அதிகமுள்ள உணவுகள் : தவிடு நீக்கப்படாத அரிசி, குரக்கன், உளுந்து மா, பயறு, கடலை போன்றனவாகும் (கோதுமை மாவினால் தயாரிக்கப்படும் உணவுகளில் நார்ப் பொருள் சிறிதளவேனும் காணப்படாமையால் அவை உகந்ததல்ல) நீங்கள் உட்கொள்ளும் மாச்சத்து குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு நாளும் அதனை சமமாகப் பேண வேண்டும்.

03. கொழுப்புச் சத்துள்ள உணவுகளை உட்கொள்ளும் போது நாளொன்றுக்குத் தேவையான கொழும்புச் சத்தின் அளவு மற்றும் வகை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். சூரிய காந்தி எண்ணெய், ஒலிவ், நல்லெண்ணெய் என்பன உகந்தது என்பதுடன் அவற்றைக் குறைவாகவே பயன்படுத்த வேண்டும். பன்றிறைச்சி, மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, சீஸ், ஆடையுடனான பால், பட்டர் என்பவற்றில் காணப்படுகின்ற கொழுப்பு உகந்ததல்ல

04. போதுமானளவு புரதமும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். பயறு, கடலை, கௌப்பி, பருப்பு, மீன், தோல் நீக்கப்பட்ட கோழிறைச்சி ஆகிய உணவுகள் மூலம் புரதச்சத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும். சிறிய மீன்கள் மிகவும் சத்துள்ளவை.

05. உரிய வேளைக்கு உணவு உட் கொள்ளவும். உணவு நேரங்களைத் தவிர்க்கக் கூடாது.

06. உப உணவாக ஏதேனும் பழ வகைகள், சீனி அல்லது பாணி சேர்க்கப்படாத தயிர் என்பவற்றை உட்கொள்ள முடியும். புடிங் வகைகள், வட்டிலாப்பம், டொபி, சொக்லேட், ஐஸ்கிறிம் போன்றவற்றைக் குறைவாகவே உட்கொள்ள வேண்டும்.

07. பிராதன உணவு வேளைகளின் போது நீங்கள் ஏதேனும் பழம் (அரைப்பழம்), சர்க்கரை சுவையற்ற பிஸ்கட், சர்க்கரை சேர்க்காத ஒரு கோப்பை பால் என்பவற்றை உப உணவாக உட்கொள்ள முடியும். இனிப்பு உணவுகள், கேக், சீனி, கருப்பட்டி, பேரீச்சம்பழம், இனிப்புப் பானங்கள், மோல்ட் கலந்த பால் வகைகள் மற்றும் கொழுப்புச் சத்துள்ள மாப்பொருள் அடங்கிய பால் மா வகைகள் ஆயின் மிக சொற்பமான அளவே உட்கொள்ள வேண்டும்.

08. நீங்கள் பருமனானவர் எனில் உடல் எடையைக் குறைப்பதற்கு ஆர்வம் காட்டுங்கள். அதிக கலோரிகளைக் கொண்ட உணவுகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். உடற் பருமனைக் குறைப்பதன் ஊடாக நீரிழிவினைச் சிறந்த முறையில் கட்டுப்படுத்த முடியும்.

09. உப்புப் பாவனையைக் குறைக்கவும்.

## நீரிழிவு நோயாளர்களுக்கு உணவு தொடர்பில் ஆலோசனைகள்

### 01. பின்வரும் உணவு வகைகளைக் கூடுமானவரை தவிர்க்கவும்

அனைத்து வகையான இனிப்பு உணவுகள் : சர்க்கரை, கருப்பட்டி, தேன் பாணி, சிரப் வகைகள், பேரீச்சம்பழம், டொபி, கேக், இனிப்புப் பண்டங்கள், எள்ளு உருண்டை, மஸ்கட், புடிங் வகைகள், வட்டிலாப்பம், சொக்லேட், சூயிங்கம், பழப்பாகு வகைகள், மாஸ்மெலோஸ், ஜெலி வகைகள், குளிர் பானங்கள், இனிப்பு சேர்க்கப்பட்ட பழச்சாறுகள், இனிப்பு பிஸ்கட்கள், ஐஸ்கிறீம், ரின் பால், மோல்ட் பால் மா.

### 02. பின்வரும் உணவு வகைகளை வெகுவாக உட்கொள்ள முடியும்

**அனைத்து கீரை வகைகள்** : பொன்னாங்கண்ணி, வல்லாரை, அவரை, பசளி, அகத்தி

**மாப்பொருள் குறைந்த மரக்கறி வகைகள்** : போஞ்சி, பயற்றங்காய், சிறகவரை, கத்தரி, வெண்டைக்காய், தக்காளி, கோவா, லீக்ஸ், முள்ளங்கி, நோக்கோல், பாகற்காய், வெள்ளரி, வட்டக்காய், முருங்கை, சிகப்பு வெங்காயம், பயறு, கௌப்பி, சோயா, அவரை, மற்றும் தானிய வகைகள்.

## 03. பின்வரும் உணவு வகைகளை நடுத்தர அளவில் உட்கொள்ள முடியும்.

**தானிய வகை :** தவிடு நீக்கப்படாத அரிசி, மா இடியப்பம் மற்றும் பிட்டு என்பன. ஆட்டா மாவினால் தயாரிக்கப்பட்ட உணவுகள், ரொட்டி, இடியப்பம், குரக்கன் பிட்டு போன்றவை.

**கிழங்கு வகைகள் :** உருளைக்கிழங்கு, வற்றாளை, மரவள்ளி, சேனைக்கிழங்கு, கரட், இராசவள்ளி

**மாப்பொருள் அடங்கிய மரக்கறி பழவகை :** வாழைக்காய், பலாக்காய், பலா வித்து, ஈரப் பலா.

**இறைச்சி உணவுகள் :** கோழியிறைச்சி, முட்டை வெள்ளைக்கரு, மீன்

**இனிப்புச் சுவை கலக்காத பழரசம் :** தோடை, கொடித் தோடை, தேசிக்காய்

**பழங்கள் :** பப்பாளி, வாழைப்பழம், தர்பூசணி (அரைப்பழம்) மிகவும் உகந்தவை.

## 04. வழமையான ஆலோசனைகள்

- நார்த்தன்மை அதிகமுள்ள உணவுகள் உகந்ததாகும். கோதுமை மாப் பாணை விட, குரக்கன் பாண் சிறந்தது. கோதுமை மாவினால் தயாரிக்கப்படும் பாண் மற்றும் உணவுகளைக் கூடியவரை மட்டுப்படுத்தவும்.
- குரக்கன் மற்றும் கீரை வகைகள் அதிக நார்த் தன்மை கொண்ட உணவுகளாகும்.
- தவிடு நீக்கப்படாத அரிசி மற்றும் அதனால் தயாரிக்கப்படும் இடியப்பம், அப்பம் போன்ற உணவுகள் தவிடு நீக்கப்பட்ட அரிசி மற்றும் அதனால் தயாரிக்கப்படும் உணவுகளை விடவும் சிறந்ததாகும். சர்க்கரை, சீனி, என்பனவற்றைப் போன்றே ஒவ்வாதவையாகும். குறிப்பாக மாட்டிறைச்சி, பன்றியிறைச்சி, ஆட்டிறைச்சி என்பன மட்டுப்படுத்தப்பட வேண்டும். பழச்சாறு அருந்துவதை விடப் பழத்தை உண்பது உகந்தது. மிருகக் கொழுப்பை விடவும் மரக்கறி எண்ணெய் உகந்ததாகும்.

## உடற்பயிற்சி

1. நோயினால் பீடிக்கப்பட்டவர்களும் நோயற்றவர்களும் சிறந்த உடல் நலனைப் பேணுவதற்கு உடற்பயிற்சி இன்றியமையாத ஒன்றாகும்.

2. உடற்பயிற்சியின் மூலம் உடற் பருமனைக் குறைத்துக் கொள்ள முடியும் அத்துடன் நீரிழிவு ஏற்படுவதையும் தடுக்க முடியும்.
3. இது தவிர நீரிழிவு நோயாளர்களுக்கு உடற்பயிற்சியின் மூலம் பல்வேறு நன்மைகள் ஏற்படுகின்றன. குருதியில் உள்ள குளுக்கோஸை செல்களுக்குள் உட்செலுத்தும் வேகம் அதிகரிப்பதுடன் குருதியில் உள்ள குளுக்கோஸின் மட்டமும் பேணப்படுகின்றது. அதேவேளை இன்சுலினின் செயற்பாட்டுத்திறனை விருத்தியடையச் செய்கின்றது. மேலும் குருதியிலுள்ள கொலஸ்ரோலின் மட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவும் உடற்பயிற்சியில் ஈடுபடுவது உதவியாக அமையும்.
4. தனக்குப் பொருந்தக் கூடிய விருப்பமான உடற்பயிற்சியைத் தெரிவு செய்து கொள்ளுங்கள்
   உதாரணம் : வேகமான நடைப்பயிற்சி, ஓடுதல், நீச்சல், சைக்கிள் ஓடுதல் என்பனவாகும். பொழுது போக்காக கருதி இவற்றில் ஈடுபடவும்.
5. நாளொன்றுக்குக் குறைந்தபட்சம் 20 நிமிடங்கள் வீதம் வாரத்திற்கு 3 அல்லது 4 தினங்களுக்கு உடற்பயிற்சியில் ஈடுபடவேண்டும்.

## சிறந்த மனநலம் பேணுதல்

- நீங்கள் வாழும் சூழலில் உங்களின் மன அழுத்தத்தை அதிகரிக்கச் செய்யும் காரணிகள், தடுக்கக் கூடிய மன அழுத்தங்கள் மற்றும் தடுக்க முடியாத மன அழுத்தங்கள் ஆகியவற்றை அடையாளம் கண்டிருத்தல்.
- உங்களுக்கு ஏதேனும் மன அழுத்தம் தரக் கூடிய பிரச்சினை ஏற்பட்டிருப்பின் அவற்றை நெருங்கிய ஒருவருடன் கலந்துரையாடுதல்.
- தேவையற்ற ஓய்வில்லாத நிலைமையிலிருந்து மீளுதல்
- உடல், உள ரீதியான அழுத்தங்களில் இருந்து மீள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- ஆன்மீக நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.
- நாளுக்குரிய நடவடிக்கைகளைத் தாமதமின்றி செய்து முடித்தல்.

# நீரிழிவு நோயாளர்களுக்கான பாத பராமரிப்பு

1. நீரிழிவு நோயாளர்களுக்கான விசேட பாத பராமரிப்பு தேவைப் படுவது ஏன்?

   நீரிழிவு நோயாளர்களின் பாதகங்களுக்கான குருதியோட்டம் குறைவாக இடம் பெறுவதால் சிறு காயம் ஏற்பட்டால் கூட அவை ஆறாத நிலைமை ஏற்படலாம்.

   நரம்புகளில் பாதிப்பு ஏற்படுவதால் பாதங்கள் மரத்துப் போகின்றமை காரணமாக பாதங்களில் ஏற்படும் காயங்கள் குறித்து பெரும்பாலும் உணரப்படுவதில்லை.

2. பாதங்களில் உணரப்படுதல் குறைவடைவதால் தம்மை அறியாமலேயே ஏற்படுகின்ற பாதிப்புக்கள் எவை?
   - காலில் ஆணி உண்டாதல்
   - காலணி வெட்டுதல்/கீறல் ஏற்படுதல்
   - கொப்புளம்
   - சேற்றுப்புண்
   - எரிகாயம், பாதங்களின் அநாவசிய இடங்களில் காயங்கள் ஏற்படுதல்.
   - நகம் வெட்டும் போது தோலில் வெட்டுக் காயம்/கீறல் ஏற்படுதல்.

3. நீரிழிவு நோயாளர் ஒருவரின் பாதங்களில் காயம் ஏற்படின் என்ன நேர்கின்றது?
   - காயம் ஏற்பட்ட பகுதிக்கான குருதி விநியோகம் முற்றாக இடம்பெறாமையினால் காயம் ஏற்பட்டுள்ள பகுதியில் திசுக்கள் உயிரிழக்க ஆரம்பிக்கும்.
   - உயிழந்த திசுக்களை மீளச் செயற்பட வைக்க முடியாது என்பதால் அவை ஆறுவதற்குத் தாமதமாகும்.
   - இறுதியில் உயிரிழந்த திசுக்கள் காணப்படும் பகுதியை வெட்டி நீக்க நேரிடலாம்.

4. நீரிழிவு நோயாளர்களின் பாதங்களைப் பாதுகாப்பது எப்படி?
   - நாளாந்தம் இரு பாதங்களையும் நன்றாகப் பரிசோதிக்கவும், விரல் இடைவெளிகள், பாதங்களின் அடிப்பகுதி ஆகியவற்றைப் பரிசோதிக்கவும். அவை தென்படாவிட்டால் கண்ணாடி முன்பாக வைத்து அல்லது மற்றுமொருவரின் உதவியுடன் பரிசோதிக்கவும்
   - சருமத்தில் நிறமாற்றம், வீக்கம், பாதங்களில் ஆணி உண்டாதல், கொப்புளம், தழும்பு அல்லது காயம் ஏற்படும்

அறிகுறி (சிவந்து காணப்படுதல்) காணப்பட்டால் உடனடியாக வைத்தியரை நாடவும்

- சிறு காயமாயினும் நன்றாகக் கழுவித் துப்பரவு செய்து வைத்தியரிடம் காட்டும்வரை சுத்தமான கோஸ் துணியால் அல்லது துணியால் மூடிவிடவும், ஒரு போதும் இறுக்கமாகத் துணியை சுற்றவோ அல்லது பண்டேஜ் செய்யவோ கூடாது. அத்துடன் இறுக்கமாக பிளாஸ்டர் ஒட்டுவதை தவிர்க்கவும்.
- நாளாந்தம் பாதங்களைத் துப்புரவான இளஞ் சுடுநீரில் கழுவவும். அதன் பின்னர் உலர விடவும், விரல் இடைவெளிகளில் நீர் தங்கியிருக்க இடமளிக்காதீர்கள்
- பாதங்கள் காய்ந்து விடுவதைத் தடுப்பதற்காக தடவும் ஈரப்பதத்திலான தைலங்களை விரல் இடைவெளிகளில் தடவக் கூடாது. வெளிப்புறமாக மாத்திரம் தடவவும்.
- நகங்களை நீளமாக வளர விடக் கூடாது. நகங்களைக் குறுக்காக விரல்களுக்குப் பாதுகாப்பாக வெட்டி நீக்கவும், நகங்களின் இரு முனைகளிலும் சதை உட்புறமாக அழுத்தப்படும் வகையில் நகம் வெட்டாதீர்கள்.
- காலணிகள் செருப்பு இன்றி திறந்தவெளியில் நடப்பதை தவிர்க்கவும்.
- நீங்கள் காலுறை அணிகின்றவர் எனில் துப்புரவான பருத்தியிலான காலுறைகள் அணிவதைப் பழக்கமாக கொள்ளவும்.
- நீங்கள் நாளாந்த காலணி, காலுறை அணிகின்றவராக இருப்பின் இரண்டு மணித்தியாலங்களுக்கு ஒரு தடவையேனும் அவற்றைக் கழற்றி பாதங்களை வெறுமனவே வைத்திருப்பதற்கும் பழகிக் கொள்ளுங்கள்.
- அதிக சூடான மற்றும் அதிக குளிரான திறந்தவெளிகளில் காலணிகளின்றி நடப்பதைத் தவிர்க்கவும்.
- அனைத்து சந்தர்ப்பங்களிலும் உங்களின் இரண்டு பாதங்களையும் முகத்தைப் போன்று பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

கவனத்திற்கு :- நீங்கள் புகைப்பிடிப்பவர் ஆயின் கட்டாயமாக புகைத்தலை நிறுத்த வேண்டும்.

உங்கள் இரு கால்களிலும் ஏற்படும் சிறிய காயங்கள் குறித்து கவனத்தில் கொள்ளாமல் இருப்பின் கால்களை வெட்டி அகற்ற நேரிடலாம் என்பதையும் நினைவில் வைத்திருக்கவும்.

**வைத்திய கலாநிதி த.நந்தகுமார்.**
**(M.B.B.S - Sri Lanka)**

# எனது பாடசாலை

மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை நான் கல்வி கற்ற காலத்தில் மல்லாகம் தமிழ் பள்ளிக்கூடம் என்று அழைக்கப்பட்டது. இப்பாடசாலையில் நான் "50 வருட காலத்திற்கு முன் (1952 ஆனி மாதம்) எனது ஆரம்பக் கல்வியைப் பயின்ற மாணவன் என்ற பெருமையைக் கொண்டுள்ளேன். நான் இப் பாடசாலையில் கல்வி கற்கும் போது மாணவர் வகுப்பில் கட்டுரை எழுதும் படி எனக்கு கற்பித்த ஆசிரியரால் பணிக்கப்பட்டது. அப்போது "எனது பாடசாலை", "எனது விடுமுறை" என்ற தலைப்பில் கட்டுரை எழுதி எனது ஆசானின் நன்மதிப்பைப் பெற்றேன்.

நான் படித்த காலம் அதற்கு முன்பும் பின்பும் மல்லாகத்தில் வசிப்போர் எல்லோரும் இப்பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியைப் பயின்று பல பதவிகளை வகித்துக் கொண்டிருக்கின்றார்கள். பலரது கல்வியின் தொடக்கத்தை அத்திவாரமிட்டுக் கொடுத்த பெருமை இப்பாடசாலைக்கு உள்ளது.

அவ்வாறே இப்பாடசாலையில் எனது தாயார், சிறியதாயார், மாமனார், எனது மனைவி மற்றும் எனது சகோதரர் உறவினர் எல்லோருமே இப்பாடசாலையில் பயின்று பலனைப் பெற்றவர்கள் என்ற வகையில் நான் பெருமை உடையவனாகவும் நன்றி உடையவனாகவும் உள்ளேன்.

எனது காலத்தில் இப்பாடசாலையில் ஆசிரியராகக் கடமை புரிந்த தம்பிமுத்து உபாத்தியார் அவர்கள் இப்பாடசாலையில் கல்வி பயின்றோர் மற்றும் ஊரவர்கள் எல்லோரினதும் நன்மதிப்பைப் பெற்றுள்ளார். இவர் ஆரம்பக் கல்வியைக் கற்பிக்கும் பொறுப்பாசிரியராக இருந்ததுடன் தனது ஆசிரிய சேவைக்காலத்தை இப்பாடசாலைக்கே அர்ப்பணித்துச் சேவை செய்துள்ளமையால் இன்றும் பலரின் மனதில் தனது பெயரை முத்திரை பதித்துள்ளார்.

எனவே இப்பாடசாலையைத் தொடர்ந்து நடாத்திச் செல்லும் அதிபர், ஆசிரியர், இப்பகுதி மக்கள் அனைவரும் பாடசாலையின் வளர்ச்சியில் பங்கு பற்றி மாணவர்களது கல்வி மேம்பட வைப்பதுடன் பாடசாலைக்கும் பெருமை தேடித்தருதல் சிறப்புடையதாகும். இப்பாடசாலையினை நாடி வரும் சிறார்களுக்கு இப்பாடசாலை நல்ல

கல்வியை வழங்கி வருவதோடு, பிற பாடசாலைகளுக்குச் சமமாக விளையாட்டுப் போட்டி, பரிசில் அளிப்பு விழா, பேச்சுப் போட்டிகளில் மாணவர்களைப் பங்கு பெறச் செய்து மாணவர்களின் ஆளுமை வளர்ச்சி மேம்பட வைப்பதில் அதிபர், ஆசிரியர்களின் பங்களிப்பு பாராட்டுக்குரியது. விழாக்கள், வைபவங்களில் மேலைத்தேய வாத்தியக் கருவிகளை மாணவர்களுக்குப் பயிற்றுவித்து விழாக்களைச் சிறப்பாக நடாத்தி வைப்பதில் அதிபர் ஆசிரியர்கள் பணி திறம்பட முன்னேறியுள்ளது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

இவ்வாறு பெருமை வாய்ந்த இப்பாடசாலை இப்போது போதியளவு மாணவர் இல்லாமையைப் போக்க இங்குள்ளவர்கள் தம் பிள்ளைகளை இப்பாடசாலையில் கல்வி பயில வாய்ப்பு அழிப்பதன் மூலம் பாடசாலையின் திறமையை மேலும் விருத்தி செய்யலாம் என்பது எனது கருத்தாகும்.

**கு.விசுவலிங்கம்**
**சட்டத்தரணி**
**பழைய மாணவன்**

# தகவல் தொழில்நுட்பமும் அதன் வளர்ச்சியும்

மனிதன் பயணிக்கும் பிரயாணமானது 20ஆம் நூற்றாண்டினைக் கடந்து 21ஆம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. இப்பிரயாணத்தில் மனித இனமானது பல்வேறு வளர்ச்சியினைக் கண்டுள்ளது. இவ்வளச்சியின் உச்சக்கட்டமே தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி ஆகும்.

இக்காலகட்டத்தில் உலகின் பன்மொழி ஊடகமாக தகவல் தொழில்நுட்பத்தைக் கூறலாம். இத்தொழில் நுட்பத்தில் முக்கிய இடத்தை வகிப்பது கணனி ஆகும். இக்கணனி ஊடாக இணையத்தில் உலாவுவதன் மூலம் மனிதனுக்கு வேண்டிய தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். இதிலிருந்து தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினைக் காண முடிகின்றது.

தகவலை அறிந்து கொள்ளும் மற்றொரு சாதனமாகத் தொலைக்காட்சி காணப்படுகின்றது. இத் தொலைக்காட்சியிலிருந்து உள்நாட்டுச் செய்திகள், வெளிநாட்டுச் செய்திகள், பொழுது போக்கு அம்சங்கள், பொதுவான அம்சங்கள் போன்றன ஒலிகளாகவும் காட்சிகளாகவும் தெரிந்து கொள்ள முடியும்.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் மற்றொரு படிக்கல்லாகத் தொலை நகலைக் கூறலாம். இத் தொலை நகலில் இருந்து எழுத்து அல்லது படங்களை அதே வடிவில் பெற்றுக் கொள்ள முடியும்.

அந்த வகையில் அதிக பயன்பாட்டிலுள்ள இணையத்தமிழ் உருவாகியது. தமிழ் விசைப்பலகைக் குறியீடுகளும் உருவாகியுள்ளன. இதன் காரணமாக கட்டாயமாக ஆங்கில மொழி தெரிந்த ஒருவன் மட்டும் தான் தொழில்நுட்ப உலகில் நுழையலாம் என்ற கருத்து நீங்கி எந்தவொரு சாதாரண மனிதனாலும் இக்காலப் புவியில் வாழலாம் என்பது உறுதியாகிறது. இதற்கு காரணம் என்னவென்றால் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியே ஆகும்.

இன்றைய புவியானது கிராமமாகி விட்டது. இதற்குக் காரணம் உலகமயமாக்கல், சர்வதேச தொடர்பு, திறந்த பொருளாதாரக் கொள்கை ஆகும். எந்தவொரு தனி மனிதனும் தனக்கென ஆதார கருப்பொருளின்றி வெற்றியாளனாக உருவாக முடியாது. தாவரம்

ஒன்றின் வாழ்க்கைக்கு வேர் எவ்வாறு உதவுகின்றதோ அல்லது துணை புரிகின்றதோ அதே போல் எந்தவொருமனிதனுக்கும் ஆசான்கள், பெற்றோர், நூல்கள் துணை புரிய வேண்டும்.

இதே வகையில் ஒவ்வொரு மனிதனும் மற்றைய மனிதர்கள் மீது தங்கி வாழ்கின்றமையால் அவர்களிடையே நுண்ணிய தொடர்பு அவசியமாகின்றது. இத் தொடர்பே தகவல் பரிமாற்றம் எனப்படும். இன்று மனிதன் வாழும் பூமியில் உலகின் எந்த இடத்தில் வசிக்கும் மனிதனிடத்திலும் தொடர்பு கொள்ளக் கூடியதாக உள்ளது. இதற்கு காரணம் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியே ஆகும்.

பழைய காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் தமது குடும்பம் தமது வேலை என சிறிய ஒரு வட்டத்தினுள் வாழ்க்கை நடாத்தினார்கள். ஆனாலும் இக்கால மனிதர்கள் அவ்வாறில்லை. சர்வதேச மட்டத்தில் தகவல்களைப் பரிமாற்றி தொடர்புகளை வைத்துள்ளனர். இதற்கு காரணம் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியே ஆகும்.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் பல பாதகமான விளைவுகளும் காணப்படுகின்றன. கணனியினைப் பயன்படுத்தும் சிறுவர்கள் கணனியோடு அமர்ந்து விடுகின்றார்கள். வெளி உலகைப் பார்க்கத் தவறிவிடுகின்றார்கள். இது மட்டுமன்றி தொலைக்காட்சியில் ஆபாசப் படங்களைப் பார்த்து கெட்டு விடுகின்றார்கள். இத்தகைய பாதகமான விளைவுகள் தகவல் தொழிநுட்ப வளர்ச்சி மூலம் கிடைக்கப்பெறினும் மனிதனுக்குத் தகவல் தொழிநுட்ப வளர்ச்சி இன்றியமையாததாகி விட்டது.


## Some Short Cuts Keys

| | |
|---|---|
| New | Press Ctrl + N |
| Open | Press Ctrl + O |
| Save | Press Ctrl + S |
| Print | Press Ctrl + P |
| Undo | Press Ctrl + Z |
| Redo | Press Ctrl + Shift + Z |

| | | |
|---|---|---|
| Cut | Press | Ctrl + X |
| Copy | Press | Ctrl + C |
| Paste | Press | Ctrl + V |
| Replace | Press | Ctrl + H |
| Go to | Press | Ctrl + G |
| Tool Box | Press | Ctrl + T |
| Select All | Press | Ctrl + A |
| Task pane | Press | Ctrl + $F_1$ |
| Page Number | Press | Alt + Shift + P |
| Time Number | Press | Alt + Shift + T |
| Date Number | Press | Alt + Shift + D |
| Repeat | Press | Ctrl + Shift + F |
| Window | Press | Ctrl + W |
| L. Alignment | Press | Ctrl + L |
| R. Alignment | Press | Ctrl + R |
| C. Alignment | Press | Ctrl + E |
| Justify | Press | Ctrl + J |
| Under Line | Press | Ctrl + U |
| Italic | Press | Ctrl + I |

**G.Piratheepan**

**(பழைய மாணவன்)**



# மாணவர்களும் மொழி விருத்தியும்

சிந்தனையிலிருந்து வெளிப்படுவது மொழியாகும். எல்லோரும் முதலில் கற்பது தாய் மொழியாகும். மொழிக்கு ஒலி வடிவம் வரிவடிவம் என இரண்டு வடிவங்கள் காணப்படுகின்றன.

ஒலி வடிவம் படித்தவர்கள் தொடக்கம் பாமரர் வரை எல்லோரும் பயன்படுத்துவதாகும். இதனை பேச்சு வழக்கு என்று அழைப்பார்கள் பேச்சு வழக்கு மொழியை எல்லோரும் பயன்படுத்துவார்கள். இது சாதாரணமாக பிள்ளை பிறந்து வளரும் போது இதனைப் பேசுகிறது.

பேச்சு வழக்கு நல்ல முறையில் அமைவது சிறப்பானதாகும். எழுத்து வழக்கு வரிவடிவமாகும்.எழுத்து வழக்கினை மாணவர்கள் பள்ளியில் பெற்றுக் கொள்கிறார்கள். தரம் ஒன்றில் கற்கின்ற போது மாணவர்கள் எழுத்துக்களை இனங்கண்டு கொள்வார்கள். அத்துடன் இரண்டு எழுத்துச் சொற்கள் போன்றவற்றை அறிந்து கொள்வார்கள். அத்துடன் வாசிப்புத் திறனையும் வளர்த்துக் கொள்வார்கள்.

தரம் இரண்டில் சிறு வாக்கியங்கள் எழுதுவது வாசிப்பது என மொழியை வளர்த்துக் கொள்வார்கள். எழுத்துப் பிழையின்றி எழுதுவது, பிழையின்றி வாசிப்பது என்பன வளர்க்கப்படுகின்றன. மேலும் கதை கூறல், பாடல்கள் பாடுதல் என்பன மொழியை விருத்தி அடையச் செய்ய மாணவர்கள் முன்வைக்கும் செயற்பாடுகளாகும்.

இது போல தரம் மூன்று, நான்கு, ஐந்து வகுப்புக்களில் மேலும் மொழி விருத்தி மேம்படுத்தப்படுகின்றது. இங்கு கட்டுரை எழுதுதல், படம் பார்த்து எழுதுதல் என வளர்க்கப்படுகின்றது. அத்துடன் மாணவர்கள் தாமாகவே வாசிக்கின்ற பழக்கத்தை நடைமுறைப்படுத்தினால் மாணவர்களின் மொழி விருத்தி மேலும் வளர்ச்சியடையும்.

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என்ற வாசகத்தை மனதில் கொண்டு மாணவர்கள் பல நூல்களை வாசிப்பதால் மாணவர்களின் மொழி நடை உயர்வடையும் மாணவர்கள் நல்ல மொழி நடையைப் பயன்படுத்துவார்கள்.

மாணவர்கள் எந்தப் பரீட்சை வினாத்தாளையும் சரியாக வாசித்து விளங்கி சரியான முறையில் விடையளிப்பார்கள். இதனால் மாணவர்களின் பரீட்சைப் புள்ளி உயர்வடையும்.

மாணவர்கள் தமது கையெழுத்துக்களைத் தெளிவாக எழுத வேண்டும். சிறு வயதிலிருந்து உறுப்பாக எழுதும் பழக்கத்தினைக் கடைப்பிடிக்க வேண்டும். நன்றாக எழுதும் ஆற்றலைப் பெற்ற மாணவர்கள் ஆக்கப் போட்டிகளில் பங்கு பற்றி பரிசு பெறும் வாய்ப்பினைப் பெறுவார்கள். எழுத்தாற்றல் ஒரு கலையாகும். மாணவர்கள் வாசிப்பு எழுத்து இரண்டு திறன்களிலும் தேர்ச்சி அடைந்தால் அவர்களின் கல்வி மேலும் வளர்ச்சியடையும்.

ஆரம்பக் கல்வி கற்கின்ற மாணவர்கள் தமது மொழியாற்றலை தரம் ஐந்து கற்று வெளியேறுகின்ற போது விருத்தியடையச் செய்து இடைநிலைக் கல்வியில் மேலும் மொழி விருத்தியை அபிவிருத்தி செய்ய வேண்டும். இதன் மூலம் மாணவர்கள் மொழியில் உயர்வான நிலையை அடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

ஆசிரியர்
**திரு.ச.கண்ணன்.**
**யா/மல்லாகம் விலாலாட்சி வித்தியாசாலை**

**கல்லான் ஆனாலும் கணவன், புல்லன் ஆனாலும் புருஷன் :-**

கற்காதவன் என்றாலும் கணவன், குடிகாரன் என்றாலும் புருஷன் என்பது தான் இதன் உண்மையான அர்த்தமாகும். கண் + அவன் = கணவன். ஒரு பெண்ணுக்கு கிடைத்த கணவன் அவளுக்குக் கண் போன்றவன் ஆவன். கணவன் எத்தகையவனாயினும் அவனே கணவன் என்பதாகும். கணவன் கல்லாகவோ புல்லாகவோ சடப்பொருளாகவோ மாறிநிற்பதாகப் பொருள்காட்டி கல் ஆனாலும் கணவன், புல் ஆனாலும் புருஸன் என்று பிழையாகக் கூறிப்பழகி விட்டோம்.

# ஒரு புத்திமதி

ஓர் ஊரில் ஒரு மன்னர் இருந்தார். அவர் ஒரு நாள் தன் அமைச்சரை அழைத்துக் கொண்டு காட்டுக்குச் சென்றார். அங்கே ஒரு முனிவர் இருந்தார். அவர் முன்னால் அரசர்போய் நின்று "சுவாமி என்னை ஆசீர்வதியுங்கள். எனக்கு ஏதாவது புத்திமதி சொல்லுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

முனிவர் அரசனை ஆசிர்வதித்தார். பிறகு கூறினார்.

"மகனே! நீ எந்தக்காரியத்தைச் செய்தாலும் அதைச்செய்வதற்கு முன்னால் ஒரு தடவை அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை நன்றாக யோசித்துப்பார். உன் மனதுக்கு "அதுசரி" என்று தெரிந்தால் மட்டும் அதை நீ செய்ய வேண்டும்" என்றார்.

அரசர், முனிவர் சொன்னதை அப்படியே மனதில் வாங்கிக் கொண்டார்.

அவர் முனிவர் காலடியில் விழுந்து வணங்கினார். நூறு பொற்காசுகளை முனிவர் காலடியில் வைத்து விட்டுத்திரும்பினார்.

அரசனின் செயலை அமைச்சர் கவனித்தார்

அவர், "என்ன இது! நமது அரசர் இவ்வளவு ஏமாளியாக இருக்கிறாரே... இந்த ஒரு சாதாரண யோசனை சொன்னதற்காக மன்னர் முனிவருக்கு நூறு பொற்காசுகள் கொடுத்து விட்டாரே! என்று நினைத்தார்.

அமைச்சர் இப்படி நினைப்பது அவர் முகத்தைப் பார்த்ததும் அரசருக்குப் புரிந்தது. இருந்தாலும் அதைப்பற்றி அமைச்சரிடம் அவர் ஒன்றும் கேட்கவில்லை!

இரண்டு பேரும் அரண்மனைக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்கள்.

அதற்குப் பிறகு அரசர் என்ன செய்தார் தெரியுமா?

காட்டில் முனிவர் சொன்ன அந்தப் புத்திமதியை ஒரு கல்லில் கல்வெட்டாகச் செதுக்கினார். அதைத் தன் அறையில் எல்லோருடைய கண்ணிலும் படும் வகையில் பதித்து வைத்தார்.

இப்போதும் அரசரின் செயலைக் கவனித்த அமைச்சர், "என்ன இது?.... நம் மன்னரின் அறியாமையைப் புரிந்து கொள்ளவே முடியவில்லையே! இதைப் போய் கல்லில் செதுக்கி வைக்க வேண்டுமா? என்று நினைத்துக் கொண்டார்.

சில நாள்கள் கடந்தன.

ஒரு நாள் அந்த மன்னருக்குக் கடுமையான வயிற்றுவலி ஏற்பட்டது.

உடனே அவர் அரண்மனை வைத்தியரைக் கூப்பிட்டார்.

வைத்தியர் வந்து சேர்ந்தார்.

அவர் மன்னரைச் சோதித்தப் பார்த்துவிட்டு "சிறிது நேரம் இப்படியே படுத்திருங்கள்................" நான் எங்கள் வீட்டுக்குப் போய் இந்த நோய் நீங்குவதற்கு ஒரு மருந்தைத் தயார் செய்து கொண்டு வருகின்றேன்." என்று கூறி விட்டு விரைந்து சென்றார்.

வைத்தியர் வீட்டிலிருந்து மருந்து எடுத்துக் கொண்டு வந்த சமயத்தில் மன்னர் ஒரு கட்டிலில் கண்மூடிப் படுத்திருந்தார். அருகில் அப்போது யாரும் இல்லை.

வைத்தியர் வந்தார். ஒரு சிறிய கோப்பையில் கொஞ்சம் மருந்தை ஊற்றினார். சுற்றும் முற்றும் பார்த்தார், ஏதோ ஒரு பொடியை மருந்தில் கலந்தார்...... கலந்து எடுத்துக் கொண்டு மன்னரை நெருங்கினார். கொஞ்சம் யோசித்தார். பிறகு திரும்பிப் போனார். கையிலிந்த மருந்தைக் கீழே கொட்டிவிட்டு வந்தார். அந்தக் கோப்பையை நன்றாகச் சுத்தம் செய்து விட்டு மறுபடியும் சிறிது மருந்தை ஊற்றி எடுத்துக் கொண்டு வந்து "மன்னர்" என்று மெதுவாக கூப்பிட்டார்.

மன்னர் எழுந்தார்! வைத்தியரே .......... நான் கண்களை மூடிக் கொண்டிருந்தாலும் அவ்வப்போது நீங்கள் செய்ததைக் கவனித்துக் கொண்டுதான் இருந்தேன். முதலில் எதையோ கலந்தீர்கள்...... பிறகு அதைக் கொட்டி விட்டு இப்போது வேறு கொண்டு வருகிறீர்கள் ..... என்ன விடயம் உண்மையைச் சொல்லுங்கள் என்று மிரட்டினார்.

வைத்தியர் பயந்து போய் விட்டார். அப்படியே மன்னரின் காலில் பொத்தென்று விழுந்தார், உண்மையைச் சொன்னார்.

"மகாராஜா ….. உங்களுடைய படைத்தளபதி உங்களைக் கொல்லச் சதி செய்தார். அவர் என்னிடம் விஷம் கலந்து உங்களுக்குக் கொடுக்கச் சொன்னார். அதன் பொருட்டு அவர் எனக்கு நிறையப் பணம் தருவதாகக் கூறினார். நானும் அதற்குச் சம்மதித்து இங்கே வந்தேன். அவன் கொடுத்த விஷப் பொடியை மருந்தில் கலந்தேன். அதை எடுத்துக் கொண்டு உங்களிடம் வந்த போது எதிரில் நீங்கள் வைத்திருக்கும், "நீ எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதைச் செய்வதற்கு முன்னர் ஒரு தடவை அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை நன்றாக யோசித்துப்பார் …….. உன் மனதுக்கு அது சரி என்று தெரிந்தால் மட்டும் அதை நீ செய்ய வேண்டும்." என்ற வாசகம் என் கண்ணில் பட்டது. அது என்னை யோசிக்க வைத்தது. நாம் செய்யும் செயலால் என் உயிருக்கே ஆபத்து ஏற்படும் என்பதைப் புரிந்து கொண்டேன். உடனே திரும்பிப் போய் விஷத்தைக் கொட்டிக் கழுவி விட்டு வேறு மருந்தை ஊற்றிக் கொண்டு வருகிறேன் என்று தெரிவித்தார்.

அப்போது அந்த மன்னர் அமைச்சரைக் கூப்பிட்டு "பார்த்தீர்களா" இந்தப் புத்திமதியை அன்றைக்கு நீங்கள் அலட்சியமாக நினைத்தீர்கள் இன்றைக்கு அது தான் என் உயிரைக் காப்பாற்றியிருக்கிறது.! என்றார்.

அமைச்சர் தலையைக் குனிந்து கொண்டார்.

ஆதலால்… பெரியவர்கள் நமக்குச் சொல்லும் புத்திமதி ஆரம்பத்தில் சாதாரணமாகத் தெரியும்! அதற்காக நாம் அதை அலட்சியம் செய்யக் கூடாது.

**திருமதி.ஜெ.ஜீவானந்தன்**

**ஆசிரியர்**

**யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை**

# இலங்கையின் உலகப் பாரம்பரியக் களங்கள்

இலங்கையின் உலகப் பாரம்பரியக் களங்கள் எட்டு என ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனத்தினால் பட்டியலிடப்பட்டுள்ளன. அவை முறையே அனுராதபுரம், புனித நகர் பொலன்னறுவை, புராதன நகர் சிகிரியா, சிங்கராஜக் காடு, கண்டி புனித நகர், காலி பழைய நகரும் அதன் தற்காப்பு கோட்டைக் கொத்தளங்களும், தம்புள்ளை பொற்கோவில் மற்றும் இலங்கையின் மத்திய மலைப்பகுதிகள்

**இவற்றுள் முக்கியமானதாக கருதப்படுபவை:-**

## பொலன்னறுவை (1982)

இது இலங்கையின் வடமத்திய மாகாணத்திலுள்ள ஒரு புராதன நகரமாகும். தற்பொழுது இது பொலன்னறுவை மாவட்டத்தின் தலைநகராக உள்ளது. கி.பி 10ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 13ஆம் நூற்றாண்டு வரை பண்டைய இலங்கையின் தலைநகராக விளங்கியது. இது இரண்டாவது புராதன இலங்கை இராச்சியமாகும். சோழர் இலங்கையை ஆண்ட காலத்தில் இதனைத் தலைநகராக்கியிருந்தனர். பின்னர் இந்நகரம் முதலாம் விஜயபாகு மன்னர் காலத்திலும் இலங்கையின் தலைநகரமாக விளங்கியது.

பொலன்னறுவை வட மத்திய மாகாணத்தின் இரண்டாவது பெரிய நகரமும் அழகிய நகரமும் ஆகும். இங்கு பசுமையாகச் சூழலும் புராதன கட்டிடங்களும் பராக்கிரம சமுத்திரம் எனப்படும் ஆறும் காணப்படுகின்றது.

## சிகிரியா (1982)

சிகிரியா மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ளை நகரத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது. 1144 அடி உயரமான இக்குன்றினுள் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய 6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சித்திரங்கள் பல உள்ளன. எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே இக்கோட்டையை முதலாம் காசியப்பன் (கி.பி. 477-495) அமைத்துத் தலைநகராக்கினான்.

இக்குகை ஓவியங்கள் இயற்கை வர்ணங்கள் கொண்டு பிராஸ்கோ முறையில் வரையப்பட்டுள்ளன. இவ் ஓவியங்களில் காணப்படும் பெண்கள் தேவதைகள் எனவும், காசியப்பனின் மனைவிகள் எனவும் கூறப்படுகின்றனர். இவர்களில் சிலர் கையில் தட்டை ஏந்தியவாறும் சிலர் மலர்க்கொத்தை ஏந்தியவாறும் தனித்தும் கூட்டமாகவும் வரையப்பட்டுள்ளனர். சிகிரியா இலங்கையில் அதிகம் பார்வையாளர்களால் வரலாற்று இடம் எனும் சிறப்பைப் பெற்றது.

## சிங்கராஜக் காடு (1988)

இது ஒரு பாதுகாக்கப்பட்ட தேசிய வனமாகும். சிங்கராஜக் காடு சப்ரகமுவா, தென் மாகாணங்களின் எல்லையில் இரத்தினபுரி, காலி, மாத்தறை மாவட்டங்களில் தாழ்நில ஈரவலயத்தில் அமைந்துள்ளது. சிங்கராஜா வனம் கடல் மட்டத்தில் இருந்து 300 மீற்றர் தொடக்கம் 1170 மீற்றர் உயரம் கொண்ட அயன மண்டல மழைக்காடாகும்.

இக்காட்டின் உயிரினப் பல்வகைமை மிக அதிகமாகும். இங்கு நாட்டிற்குரிய முக்கிய மரங்கள், பூச்சிகள், நிலத்திலும் நீரிலும் வாழும் உயிரினங்கள், ஊர்வன, பறவைகள், விலங்குகள் என்பன காணப்படுகின்றன. இலங்கை உள்ளூர் பறவைகள் இருபத்தாறு வகைகளில் 20 இங்கே காணப்படுகின்றன. ஏற்கனவே முன்மொழியப்பட்ட காட்டு ஒதுக்கீடுகள் என்பவற்றை உள்ளடக்கிய 8,864 ஹெக்டயர் பரப்பளவை உலக உரிமைத் தளமாக யுனெஸ்கோ அறிவித்தது.

## கண்டி (1988)

கண்டி இலங்கையின் மத்திய மாகாணத்திலுள்ள முக்கிய நகரங்களுள் ஒன்று. இதுவே மத்திய மாகாணத்தினதும் கண்டி மாவட்டத்தினதும் தலை நகரமாகும். 1592ஆம் ஆண்டு தொடக்கம் 1815ஆம் ஆண்டு வரை அந்நியர் ஆட்சிக்கு உட்படாத கண்டி இராச்சியத்தின் தலை நகரமாக இருந்தது.

இங்குள்ள தலதா மாளிகை இலங்கையின் புகழ் பெற்ற பௌத்த ஆலயம் ஆகும். பௌத்த சமயத்தவர்களால் புனிதப் பண்டமாக மதிக்கப்படுகின்ற புத்தரின் புனிதப் பல் இங்கே உள்ளதாகப் பௌத்தர்களால் கருதப்படும் காரணத்தால் இது புனித தந்த தாது

ஆலயம் எனவும் அழைக்கப்படுகின்றது. கண்டி இராச்சியத்தின் தலைநகரமாகக் கண்டி நகரம் விளங்கியபோது, அதனை ஆண்டு வந்த அரசர்களின் அரண்மனை வளாகத்தின் உள்ளேயே இவ்வாலயமும் அமைந்துள்ளது.

## இலங்கையின் மத்திய மலைப்பகுதிகள்

இது இலங்கையில் எட்டாவதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உலக பாரம்பரியக் களம் ஆகும். இது இலங்கையின் மத்திய மலைப்பகுதி களான சிங்கராஜக் காட்டுவள சரணாலயம், ஓட்டன் சமவெளி தேசிய வனம், நக்கிள்ஸ் மலைத்தொடர் என்பனவற்றை உள்ளடக்கிய பகுதியாகும்.

இங்குள்ள மழைக் காடுகள் கடல் மட்டத்திலிருந்த 2,500 மீற்றர் (8,200 அடி) உயரத்தில் அமைந்துள்ளன. இப் பகுதி பலதரப்பட்ட பாலூட்டிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் இடமாகவுள்ளது. இது கலாசார மற்றும் இயற்கை கலந்த உலகப் பாரம்பரியக் களத் தகுதிக்கு முன்மொழியப்பட்டபோதும், அதன் இயற்கை அமைவே உலகப் பாரம்பரியக் களக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, 2010 இல் இலங்கையின் உலகப் பாரம்பரியக் களமாக அறிவிக்கப்பட்டது.

**ஆசிரியர்:-திருமதி மைதிலி சிவநாதன்.**
**யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை**

**அரசனன்று அறுப்பான், தெய்வம் நின்றறுக்கும் :-**

குற்றம் அல்லது பாவம் செய்தவனுக்கு அறுப்பவன், அதாவது தண்டனை வழங்குபவன் அரசனல்ல (அரசனன்று) தெய்வம் தான் நின்று அறுக்கும், அதாவது அப்பாவச்செயல் விடயத்தில் நின்று அதற்கான தண்டனையை உடனேயோ காலப் போக்கிலேயோ வழங்கும் என்பதாகும். இதனை மாறி விளங்கி அரசன் அன்றே (உடனே) தண்டிப்பான், தெய்வம் நின்று (காலம் கடந்து) தண்டிக்கும் என்கின்றனர்.

# ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் அறிந்திருக்க வேண்டிய பியாஜேயின் உளவளர்ச்சிப் பருவங்கள்.

மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியங்கள் ஆகியவற்றை வளர்த்து நற்பிரஜையாக வாழ உதவும் பணியே கற்பித்தல் என்று கல்வியியலாளர்கள் கூறுவர். கருத்தறிந்து சிந்தித்துக் கற்றலே கல்வியின் ஆதாரமாகும். எண்ணக்கருக்களைத் தெளிவாக விளங்கிக் கற்பதிலேயே கல்வியின் முன்னேற்றம் தங்கியுள்ளது. கல்வியின் அடித்தளம் ஆரம்பக் கல்வியாகும். எனவே ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள், ஆரம்பக்கல்விப்பிரிவு மாணவர்களின் உளவளர்ச்சித் தன்மைகளை அறிந்து அதற்கேற்ற முறையில் கற்பிப்பது பயனுடையதாகும்.

பியாஜேயின் கருத்துப்படி உளவளர்ச்சி கட்டிளமைப்பருவம் வரை பல வருடங்களினூடாக ஒழுங்கான முறையில் தொடர்ச்சியாக ஏறுநிரையில் அமைகின்றது. ஒவ்வொரு பருவத்திலும் புதுவகையான எண்ணக்கருக்கள் தோன்றுகின்றன.

பியாஜேயின் கருத்துப்படி உளவளர்ச்சிப்படிகள் நான்கு முக்கிய பருவங்களாக வகுக்கப்பட்டுள்ளன. அவையாவன.

1. புலனியக்கப்பருவம்
   (இது பிறப்பிலிருந்து ஏறத்தாழ இரண்டு வயது வரை)
2. தூல சிந்தனைக்கு முற்பட்ட பருவம்
   (2 – 7 வயது வரை)
3. தூல சிந்தனை அல்லது பருப்பொருள் சிந்தனைப்பருவம்
   (7 – 11 அல்லது 12 வயது வரை)
4. நியம சிந்தனைப்பருவம்
   (12 – 15 வயது வரை)

ஆரம்பக்கல்வி மாணவர்களின் வயதெல்லையை வைத்து நோக்குமிடத்து ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் தூல சிந்தனைக்கு முற்பட்ட பருவத்தின் உப பிரிவாகிய அகச்சிந்தனைப்பருவம் (4 ½ - 7 வயதுவரை), தூல சிந்தனைப்பருவம் (7 – 11 வயது வரை) ஆகிய

பருவங்களின் தன்மை பற்றிய கருத்துக்களை அறிந்திருப்பது பயனுடையதாகும்.

அகச்சிந்தனைப் பருவத்தில் பிள்ளைகள் ஒன்றுக்கு மேற்பட்ட தொடர்புகளை நினைவில் நிறுத்தி வைத்திருக்கும் ஆற்றலற்ற நிலையில் இருக்கின்றபடியால் எண், கனவளவு, காலம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதுள்ளனர். அவர்கள் தமது புலக்காட்சியையே ஆதாரமாகக் கொண்டு தீர்மானிப்பவர்களாகவும் பிரச்சினையிலுள்ள ஒரு விடயத்திலேயே கவனம் செலுத்துபவர்களாகவும் உள்ளனர். எண்ணிக்கை, பருமன் ஆகியவற்றின் மாறாத்தன்மை 8 வயதளவிலேயே தெளிவடையுமென்றும், கனவளவின் மாறாத்தன்மை 10 வயதளவிலேயே புரியும் என்றும் பியாஜே கூறுகின்றார். எனினும் இதில் சூழல் அனுபவம் ஆகிய காரணிகளும் பாதிக்கின்றன என்று பிரித்தானிய உளவியலாளர்கள் கண்டுள்ளனர்.

இப்பருவத்தில் பொருள்களை நிரறபடுத்துவதில் பிள்ளைகளுக்குச் சிரமம் உண்டெனவும் ஒரு நேரத்தில் இரண்டு பொருள்களை மாத்திரமே பிள்ளைகளால் ஒப்பிட முடியுமெனவும் பியாஜே கூறுகின்றார். மூன்று தடிகளின் நீளங்களை நிரற்படுத்த முடிந்தாலும் நான்கிற்கு மேற்பட்ட தடிகளை நிரற்படுத்த முடிவதில்லை. வட்டங்களை நீள்வட்டங்களினின்றும் பிரித்தறிவர். இவ்வாறே அவர்களிடம் உள விம்பங்கள் ஏற்படுவதாகப் பியாஜே கருதுகின்றார். இடைவெளியின் இலகுவான தன்மைகளான அண்மை, தூரம் போன்றவற்றைப் பிள்ளைகள் விளங்கிக் கொள்ளத் தொடங்கினாலும் நிழல், வெட்டுமுகம் போன்ற புறத்தெறி தன்மைகளும் கோணம் சமாந்தரம் ஆகிய கேத்திரகணிதக் கருத்துக்களும் இப்பருவத்திற்கு அப்பாற்பட்டவை.

அடுத்து தூல சிந்தனைப்பருவ பிள்ளைகளின் உளவளர்ச்சி பற்றி பியாஜே குறிப்பிடுகையில் இப்பருவத்தில் காலம், இடைவெளி, கனவளவு, எண்ணிக்கை, ஒழுக்க விதிகள் ஆகியவற்றின் எண்ணக்கருக்கள் தருக்க சிந்தனை முறையில் வளர்ச்சியடையும். நிகழ்ச்சிகள் மனதினுள் உளச் செயல்களாக மாறும் உதாரணமாக முந்திய பருவத்தில் தடிகளை நிரற்படுத்தும் போது ஒவ்வொரு சோடியையும் தனித்தனியாக ஒப்பிட்டவர்கள் இப்பருவத்தில் கருத்து நிலையில் சிந்தித்து தடிகளை அவதானித்து அளந்து பார்க்காமலேயே நிரற்படுத்துவர். பிள்ளைகள் இவ்வாறு எதிர்பார் திரளமைப்பைப்

பெற்றுள்ளதாகவும் இதனைக் கொண்டே பகுப்பாய்வுகளைச் செய்வதாகவும் பியாஜே கருதுகின்றார். மேலும் இப் பருவத்தில் பிள்ளைகள் முறையான கல்வி பெறுவதனால் வகுப்பறை அனுபவங்கள் மூலம் தவறான எண்ணக்கருக்களைத் திருத்தமாக அமைக்கவும் கூட்டுறவுத்தன்மைகளை வளர்க்கவும் வாய்ப்புக்கள் இருக்கின்றன.

இப்பருவத்தில் பிள்ளைகள் சிக்கலான தொடர்புகளை விளங்கி இரண்டு அல்லது மூன்று தன்மைகளைக் கொண்டு பொருள்களை நிரற்படுத்துவர். முழுப் பொருள்களுடன் அதன் பகுதிகளின் தொடர்புகளையும் விளங்குவர் எனினும் அவர்களின் சிந்தனையில் சில தடைகளுமுண்டு. அவர்கள் முழுக்க முழுக்க கருத்து நிலையில் சிந்திக்க மாட்டார்கள். விதிமுறைகள், கருதுகோள்கள் அமைத்தல், பொது விதி காணல், தரவுக்கு அப்பால் ஊகித்தல், கருத்து நிலைப் பிரச்சினை விடுவித்தல் ஆகியன அவர்களால் முடியாது.

மேலும் இப் பருவத்தில் புறத்தோற்றம் பற்றிய எண்ணக்கருக்கள் தெளிவானவையாயினும் வெட்டு முகம், போன்ற புறத்தெறி எண்ணக்கருக்கள் மந்தமாகவே வளரும். நீளம், பரப்பளவு, கோணம் ஆகிய எண்ணக்கருக்கள் ஆரம்பநிலையில் உள்ளன. ஏறுவரிசையில் அல்லது இறங்கு வரிசையில் ஒழுங்குபடுத்தவும் ஒத்த பண்புகளை அவதானிக்கவும் திறமை கொண்டுள்ளனர். அளவீடுகளைப் பொறுத்த வரையில் முதலில் மீற்றர், கிலோமீற்றர் போன்ற பெரிய அலகுகளை அளவுகோலாகக் கொண்டு அளவிடுவர். பின்னரே சென்ரிமீற்றர், கிராம் போன்ற சிறிய அலகுகளை அளவு கோலாக எடுப்பர். ஒன்பது வயதளவில் இரண்டு முக்கோணிகளின் பரப்பு ஒரு சதுரத்தின் பரப்பிற்குச் சமனானதா? என்று காணும் திறனையும் இரண்டு புள்ளிகளிலிருந்து சமதூரத்திலுள்ள புள்ளியின் ஒழுக்கு என்னவென்று விளங்கும் திறனையும் பெறுவர்.

எனவே ஆரம்பக்கல்விகற்பிக்கும் ஆசிரியர்கள் இவ் உளவளர்ச்சிப் பருவங்கள் பற்றி அறிந்திருப்பது பயனுடையதாகும். தரம் ஒன்று இரண்டில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தூல சிந்தனைக்கு முற்பட்ட பருவத்தின் உபபிரிவாகிய அகச் சிந்தனைப்பருவம் பற்றி அறிந்திருப்பது அவசியம். இப்பருவப் பிள்ளைகள் ஏற்கனவே செயல்களைச் சிந்தனையில் அமைத்துத் தொகையான எண்ணக்கருக்களைப் பெற்றிருப்பர். எனவே வாசித்தல், எழுதுதல், கணித்தல் ஆகிய செயல்களில் ஈடுபடும் போது ஒழுங்குபடுத்தப்பட்ட

விளையாட்டுக்களும் செயலனுபவங்களும் இருப்பது அவசியம். பின் தங்கிய சூழலில் இருந்து வரும் பிள்ளைகளுக்கு ஒழுங்கான விளையாட்டுக்களும் மணல், நீர், மரக்குற்றிகள் தொடர்பான செயல்களுக்கு வசதிகளும் திருத்தமான மொழி வளர்ச்சிக்கு வேண்டிய உதவிகளும் தேவைப்படுகின்றன.

தரம் 03, 04, 05 இல் கற்பிக்கும் ஆசிரியர்கள் தூல சிந்தனைப் பருவத்தின் உளவளர்ச்சி பற்றி அறிந்திருத்தல் பயனுடையதாகும். இப்பருவத்தில் செயல் அனுபவங்கள் மூலமே புதிய எண்ணக் கருக்களைப் பிள்ளைகள் பெறுவர், கனவளவு, நிறை தொடர்பாக செயல் அனுபவங்கள் இவர்களுக்கு அதிகம் தேவைப்படும்.

பியாஜே கருத்துக்கள் பற்றி சில கண்டனங்கள் முன்வைக்கப் பட்டாலும், பிள்ளைகளின் உளவளர்ச்சிபற்றியும் கலைத்திட்டம், கற்பித்தல் முறை ஆகியன பற்றியும் அறிய விரும்பும் எவரும் பியாஜேயின் கருத்துக்களை அலட்சியம் செய்ய முடியாது. அவரின் கருத்துக்களை உள்வாங்கிக் கற்பது மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு உதவியாக அமையும்.

**திருமதி.யோ.வ.தயாளன்**

**ஆசிரியர்,**

**யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை**

**வித்து – விதை :-**

இச்சொற்கள் இரண்டும் வேறானவை. தாவரங்களின் இன விருத்திக்கான உறுப்பே "வித்து" எனப்படும். விலங்குகளின் (மனிதர் உட்பட) இன விருத்திக்கான உறுப்பே "விதை" எனப்படும். தாவரவித்து என்பதைத் தாவரவிதை என்று கூறுவது தவறானது. "விதை" என்பது விலங்குகளில் பெயர்ச் சொல்லாகவும், தாவரங்கள் தொடர்பான செயற்பாட்டில் வினைச் சொல்லாகவும் அமைகின்றது. அதாவது விதை நெல் என்பது விதைக்கப்படும்/விதைப்பதற்கான நெல் என்பதாகும். விதைநெல்/நெல்வித்து என்பன வேறுபட்டன.

# கணனி

கணனி என்பது ஓர் இலத்திரனியல் சாதனமாகும். இது தரவுகளை ஒரு செய்முறைக்கு உட்படுத்தி அதிலிருந்து பயனுள்ள தகவல்களைத் தருகின்ற ஒரு சாதனமாகும். அத்துடன் Program களைக் கட்டுப்படுத்துகின்ற சேமிக்கின்ற செயற்பாடுகளைச் செய்யக் கூடிய சாதனமே கணனியாகும். இன்று கணனி அனைவராலும் அதிகளவு பயன்படுத்துகின்ற சாதனமாக மாறியுள்ளது. கணனியால் எதனையும் சுயமாக செய்ய முடியாது. கணனியின் ஒவ்வொரு அசைவையும் மனிதனே நிர்ணயிக்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு செயலையும் கணனி செய்வதற்கு மனிதன் விளக்கம் கொடுக்க வேண்டியுள்ளது. மனிதனின் தேவைகளை நிறைவு செய்ய கணனிக்கு உரித்தான இயல்புகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- வேகம் (Speed)
- திருத்தம் (Accuracy)
- நம்பகத்தன்மை (Reliability)
- சேமித்தல் தகைமை (Storage capability)
- தொடுகையின்றிய நன்மைகள் (Intangible benefit)
- குறைந்தகட்டணம் (Reduced cost)
- இணையம் (Intenet)

கணனியைப் பாவனையின் அடிப்படையில், பயன்படுத்தும் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் பருமன் அடிப்படையில் வகைப்படுத்த முடியும். ஆரம்ப காலங்களில் கணனி பாவிப்பவர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டது. நாளுக்கு நாள் கணனி பாவிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது.

## கணனிக் கலைச்சொற்கள்

| | |
|---|---|
| வலை | - WEB |
| வலைத்தளம் | - Website |
| கோப்பு | - File |
| இணையம் | - Internet |
| கடவுச்சொல் | - Password |

| | |
|---|---|
| வையக விரிவுவலை | - World wold web |
| மின்னஞ்சல் | - e-mail |
| எழுத்துரு | - font |
| விசைப்பலகை | - Keyboard |
| அச்சுப்பிரதி | - Print |
| பதிவிறக்கம் | - Download |
| வன்தட்டு | - Hard disk |
| நீக்குக | - Delete |
| பதிவேற்றம் | - Upload |
| மென்பொருள் | - Software |
| இறுவட்டு | - Compact disc |
| சேமி | - Save |
| நெகிழ்வெட்டு | - Floppy disk |
| சொல்லாடற் பெட்டி | - Dialog box |
| சுட்டி | - Mouse |
| ஆவணம் | - Document |
| உலாவி | - Browser |

செல்வி. த.மயூரி
ஆசிரியர்,
யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை

**பூப்புப் புனித நீராட்டு விழா :-**

பெண்ணானவள் பூப்பு எய்தி அதன் பொருட்டு சடங்கும் சம்பிரதாயப்படி நீராட்டல் செய்யும் விழாவே இதுவாகும். இதில் பூப்புனித என்று கருத்துமாறும்படி சுருக்கி பிழையாக அழைப்பிதழ்களில் இடுகின்றனர்.

# Mother Teresa's

To get to where mother teresa's voyage of sacrifice began, follow Calculta's creek lane, Through a neighbour hood of humble humes and they businesses. She arrived there in 1947 asking slum dwellers whether there were children. She could teach. In 1948 she left he past at the school and began a ministry among the sick. She wanted to serve the poor and live among the poorest of the poor.

In 1952, She opened the pure heart home the first of many homes for. Sick and dying street people in Calcutta. She was awarded the hobble peace prize in 1979. She was forced to reduce her activities in 1990 because of dealing health. However she confined to work and travel. In 1991 she undertook a tour of her mission worldwide.

She died on September 5th 1997. Mother teresa's book Asimplepath' was publisher in 1995.

Mother teresa's never looked angry even it was angry. She never showed .It was her love for the poor and needy. that forced her to do her work. One of her first. Students at the school said.

**T.Jatharthini**
**Teacher**
**J/Mallakam Visaladchi vidyasalai.**

**மொழிப்பிரயோகத் தவறுக்கு ஓர் உதாரணம் :-**

குற்றவாளி (கொலைகாரன்) சார்பில் ஆஜரான ஒரு சட்டத்தரணி கொலை செய்யப்பட்டவனுக்காக உண்மையான சாட்சி சொல்ல வந்தவர் கூறிய "கத்தி கொண்டு வந்தார்" என்பதை எழுதித் தரும்படி கேட்க சாட்சி கூறியவன் "கத்திக் கொண்டு வந்தார்" என்று பிழையாக எழுதியதை வைத்து, கத்திக் கொண்டு வந்தார், கத்தி கொண்டுவரவில்லை என வாதிட்டு கொலைகாரனைக் காப்பாற்றினாராம்.

# மாணவர்களது ஆக்கத்திறன் வெளிப்பாட்டில் வாசித்தலின் முக்கியத்துவம்

எழுத்தில் உள்ளவற்றை கண்களாற் பார்த்து, வாயால் உச்சரித்துச் சொல்லின் பொருள் உணர்த்துவது வாசிப்பு எனப்படும். வாசித்தலில் சொற்களைக் காணுதல், உச்சரித்தல், பொருள் உணர்த்தல் என்ற மூன்று கூறுகள் உள்ளன. வாசிப்பானது மாணவர்களிடையே பல்வேறு திறன்களை விருத்தியடைச் செய்கின்றது. வாசித்தலின் போது எழுத்துக் குறியீடுகள் ஒலிக்குறியீடுகளாக மாற்றப்படுகின்றன. வாசிப்பு எதுவாக இருந்தாலும் பொருளுணர்தலோடு இணைந்த வாசிப்பே வாசித்தல் ஆகும். எழுத்துக்களாலான சொற்கள், சொற்களாலான வாக்கியங்கள் ஆகியன வாசிக்கும் போது பொருளுணர்த்தும் மொழிக்கூறுகளாகும். ஆகவே எழுத்துக்கள், சொற்கள், வாக்கியங்கள் ஆகியவற்றின் மொழிப்பண்பாட்டுத்திறன் வாசிப்பதற்கு இன்றியமையாததாகும்.

வாசித்தல் என்பது உரத்து வாசிப்பு, மௌனவாசிப்பு, ஆற்றுகை வாசிப்பு என வகைப்படுத்தப்பட்டிருப்பினும் ஆரம்ப வகுப்புக்களுக்கு உரத்து வாசிப்புத்தான் பயன்கொடுக்கின்றது. இத்தகைய வாசிப்புக்களானது :-

- வாசிப்பு பொறிமுறைகளை அனுசரித்து வாசித்தல்.
- கிரகித்தலுக்காக வாசித்தல்.
- சொற்களஞ்சிய விருத்திக்காக வாசித்தல்.
- தொடர்பாடலுக்காக வாசித்தல்.
- இரசனைக்காக வாசித்தல்.
- கற்றலுக்காக கற்க வாசித்தல் எனப் பல்வேறு தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது.

ஆரம்ப வகுப்புக்களிலிருந்தே மாணவர்களின் வாசிப்பு ஆற்றலைச் சரியான முறையில் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இந்த வாசிப்பு ஆற்றலை வளர்த்தெடுப்பதிலே சிறுவர் கதைகளை வாசிப்பது பெரும்பங்காற்றுகின்றது. இக்கதைகளை வாசித்தல், கிரகித்தல், கிரகித்தவற்றை ஒழுங்குமுறையாக எழுதுதல் என்ற பண்புகளை வளர்த்தெடுக்கும் போது மாணவர்களது அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தியடைகின்றது.

## மாணவர் சிறுவர் கதைகளை வாசித்தலில் ஆசிரியரின் பங்கு

மாணவர்கள் கதைகளை வாசிக்கும் போது பொருள் விளங்கியும், குறியீடுகளை அவதானித்தும் வாசிப்பதற்கு வழிப்படுத்துதல் வேண்டும். முதலில் ஆசிரியர் கதையினைக் கூறும் போது சரியான முறையில் செவிமடுத்துக் கிரகித்தலுக்கு வழிப்படுத்த வேண்டும். கிரகித்து உள்வாங்கியபின் சரியான உச்சரிப்புடன் வாசிக்கப்பழக்க வேண்டும். உள்ளடக்கத்தை விளங்கி சரியான முறையில் வாசித்த பின் கதையினை ஒழுங்கு முறையில் கூற வைத்தல் வேண்டும். கூறப்பட்ட கதையில் பல்வேறுபட்ட வினாக்களைத் தொடுத்து விடைகளைக் கூற வைக்கும் போது ஞாபகத்தில் பதித்தல், சரியான செவிமடுத்தல், கிரகித்தல், புதிய சொற்கள், கருத்துக்களை அறிதல், வாசித்தவற்றை மீளப்பார்த்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளின் மூலம் மொழி வளர்ச்சிக்கு வித்திட முடியும். செவிமடுத்தல், கிரகித்தல், கூறுதல், வாசித்தல், எழுதுதல் என்ற ஒழுங்கு முறைக்கு மாணவர்கள் வழிப்படுத்தப்பட்டு வரும் போது சிறந்த கதைகளை எழுதும் ஆற்றல் வளர்க்கப்படும் என்பதில் ஐயமில்லை.

## மாணவர்களின் வாசிப்பிற்காகச் சில கதைகள்

### இயற்கை தந்த பாடம்

மாலதி நித்திரை விட்டு எழுந்துவந்து கதிரையில் அமர்ந்து இருந்தாள். "மாலதி! அம்மாவுக்கு உதவி செய்து தரமாட்டாயா?" குரல் கொடுத்தார் தாயார். தாயின் குரல் மாலதியின் காதில் கேட்டது. ஆனால் மாலதியின் சோம்பல் குணத்தால் காது கேட்காதது போல் இருந்தாள். அப்பா வந்து அதட்டினார். அப்போதும் அவள் அசையவில்லை. அம்மா தேநீர் கொண்டுவந்து கொடுத்தார். தேநீரை வாங்கிக் குடித்துவிட்டு தேநீர்க்கோப்பையை அந்த இடத்திலேயே வைத்துவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள். அப்போதும்கூட உற்சாகம் இல்லாது சேம்பேறித்தனமாகத்தான் உட்கார்ந்திருந்தாள்.

வீட்டின் முன்புறம் செழித்து வளர்ந்து கோலம் காட்டி நின்ற பூந்தோட்டத்தின் பக்கம் அவளது பார்வை நிலைத்து நின்றது. பல வகையான பூஞ்செடிகள் பல நிறங்களில் பூக்களை மலரச் செய்து அழகுபடுத்திக் கொண்டிருந்தன. கரிய வண்டுகள், பல வகையான வண்ணத்துப்பூச்சிகள், சிறிய குருவிகள் கீதங்களை இசைத்த வண்ணம் உற்சாகமாகப் பறந்து திரிந்தன. ஒவ்வொரு மலராகத் தாவித்தாவிப் பறந்தன. ஒன்றை ஒன்று முட்டி மோதவில்லை. எவ்வளவு சுறுசுறுப்பாக பறந்து பறந்து ஒவ்வொரு மலரிலும் தேனைப் பருகுகின்றன. எல்லா மலர்களும் தம்மிடமும் வந்து போகும்படி அழைப்பது போல அசைகின்றன. இந்தக் காட்சி அவளது மனதில் சிறு சலனத்தை ஏற்படுத்தியது. ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தாள். "இந்தச் சிறிய உயிரினங்கள், செடிகள், மலர்களுக்கு இருக்கும் சுறுசுறுப்பு எனக்கில்லையே! என உணர்ந்தாள்.

இந்தச் சிறிய உயிரினங்கள் என் உணர்வுகளைத் தட்டி எழுப்பிவிட்டன.நான் இனிமேல் சோம்பலாக இருக்கமாட்டேன். சுறுசுறுப்புடன் இயங்குவேன் என மனதில் உறுதி கொண்டாள். அந்த இடத்தை விட்டு எழுந்தாள். அம்மாவுக்கு உதவுவதற்காக உள்ளே சென்றாள். அன்றிலிருந்து சுறுசுறுப்புள்ள மாலதி ஆனாள்.

**தாமாக உணர்ந்தும் திருந்தலாம்**

## பாம்பும் கீரியும்

பாம்பு ஒன்று புற்றில் இருந்து தலையை நீட்டிப் பார்த்தது. ஒரு கீரி எதுவித பயமும் இன்றி உலாவுவதைக் கண்டு கொண்டது. உடனே கீரியுடன் சண்டை செய்வதற்காக வேகமாக ஊர்ந்து சென்றது. பாம்பு ஒன்று தன்னை நோக்கி வருவதைக் கண்ட கீரி பாதுகாப்பான நிலையில் நின்று கொண்டு "பாம்பே! ஏன் நாம் பகைமையாக இருக்க வேண்டும். ஒற்றுமையாக வாழலாம்தானே" என்று பணிவாகக் கேட்டது. "எங்கள் இனத்துக்கு சமாதானம் தேவையில்லை. பகைமையே எனது இலக்கு" எனக் கூறிக்கொண்டு கீரிமேல் பாய்ந்தது. கீரி தப்பித்துக்கொண்டு ஓடியது. பாம்பு துரத்திச் சென்றது.

கீரி மீண்டும் "சமாதானமாக இருப்போம்" என்று கெஞ்சியது. பாம்போ கேட்பதாக இல்லை. கீரியைத் துரத்தியது. ஓடிச் சென்ற கீரி மறைந்துவிட்டது. கீரியைத் தேடிய பாம்பினை அவ்வழியே வந்த வேட்டைநாய்கள் கண்டு கொண்டன. பாம்பைக் கடித்துக் கொன்றுவிட்டன. இச்செயலை பற்றை மறைவிலிருந்து பார்த்த கீரி பாம்புக்காக கவலைப்பட்டது.

**சண்டை செய்வதால் ஆபத்துத்தான் நேரிடும்**

## அண்ணனைத் திருத்திய தம்பி

வேலவனும் ஆதவனும் உடன்பிறந்த சகோதரர்கள். இருவரும் ஒரே பாடசாலையில் கல்வி கற்றுவந்தனர். அண்ணன் வேலவன் தரம் ஐந்தில் கற்றான். படிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. தம்பி ஆதவன் தரம் நான்கில் கல்வி கற்றான். ஆனால் ஆதவன் வகுப்பில் முதல்நிலையில் சித்தி பெற்றுக்கொண்டிருந்தான். எப்போட்டிகளிலும் வெற்றிபெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துக்கொண்டிருந்தான். வேலவனுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் "ஆதவன் கெட்டிக்காரன். சுறுசுறுப்பானவன். அவனின் அண்ணனான உனக்கு படிப்பு மத்திமம் தான்" படிப்பதில் ஆர்வமாய் இருக்கவேண்டும். என புத்திமதிகளும் கூறினார்கள்.

நாளடைவில் ஆசிரியர்களின் புத்திமதிகளும், சுட்டிக்காட்டுதல்களும் வேலவனின் மனதில் தம்பிமேல் வெறுப்புணர்வை ஏற்படுத்தத் தொடங்கியது. அந்த வெறுப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருந்தது. அதன் வெளிப்பாடாக வேலவன் ஆதவனுடன் முகம் கொடுத்துக் கதைப்பதில்லை. எதையோ பறிகொடுத்தவன் போல் எப்போதும் சோர்வாகவே இருந்தான். அண்ணனின் சோர்வுநிலைக்கான காரணத்தினை அவனது சக தோழர்கள் மூலம் ஆதவன் அறிந்து கொண்டான்.

அன்றிலிருந்து ஆதவன் அண்ணனுக்காகத் தன்னை மாற்றிக் கொ"டான். பரீட்சைகளை ஒழுங்காக எழுதாது புள்ளிகளைக் குறைவாகவே பெற்றான். போட்டிகளில் ஒழுங்கீனமாகச் செயற்பட்டான். ஆதவன் இப்போது வகுப்புநிலையில் கீழ் நிலையிலும், போட்டிகளில்

தோல்வியுமே கண்டான். ஆனால் அண்ணன் கல்வி கற்பதற்கும், போட்டிகளில் வெற்றி பெறுவதற்கும் உற்சாகம் கொடுத்தான். வேலவன் இப்போது வகுப்பில் முன்னணியிலும், போட்டிகளில் வெற்றியும் பெற்றுக் கொண்டான். இதனால் ஆதவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. வேலவனுக்கும் அளவுகடந்த சந்தோசம்.

சில நாள்களின் பின் ஆதவன் தனக்காகத்தான் விட்டுக்கொடுத்து நடந்திருக்கிறான் என்பதை வேலவன் உணர்ந்து கொண்டான். ஆதவனிடம் மன்னிப்புக் கேட்டான்.

நாம் இனிமேல் ஒற்றுமையுடன் படிப்போம். ஒற்றுமையாகவே வாழ்வோம். ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி ஆனந்தமாகச் செயற்படுவோம் என இருவரும் குதூகலித்தனர்.

**ஒற்றுமையே சிறந்த பயனை உண்டாக்கும்.**

**திருமதி.ந.தர்மதயாளன்**
**ஆசிரியர்,**
**யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை**

**ஓர், ஈர், ஒரு, இரு :-**

இச் சொற்களில் “ஓர்” அல்லது “ஈர்” என்பது உயிரெழுத்தில் ஆரம்பிக்கும் சொற்களின் முன்னால் மட்டுமே பயன்படுத்த வேண்டும். ஒரு, இரு ஆகியன உயிர்மெய் எழுத்தில் ஆரம்பிக்கும் சொற்களின் முன்னால் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

உ + ம் :- ஓர் அம்மா, ஈர் ஆண்டுகள், ஒரு பசு, இரு பசுக்கள். பத்திரிகைகள், தொலைக்காட்சிகளில் பிழையாகப் பயன்படுத்தப் படுகின்றன.

# சிறுவர்களின் பண்புகள்

சிறுவர் நல்ல சிறுவர் நாங்கள்
சிறந்த நல்ல சிறுவர் நாங்கள்
சரியும் தவறும் உணரும் அறிவு
நிறைய உடைய சிறுவர் நாங்கள்

ஆறறிவு படைத்தவர்கள்
ஆளுமையும் நிறைந்தவர்கள்
நாளை உலகை ஆளப் போகும்
வீரமுள்ள தலைவர் நாங்கள்

கள்ளம் கபடம் இல்லாத
வஞ்சனைகள் செய்யாத
பண்புடனே பாரில் வாழும்
உலகம் போற்றும் சிறுவர் நாங்கள்

உண்மை பேசும் உத்தமர்கள்
குறும்புத் தனமும் செய்பவர்கள்
நாணம் ஏதும் அறியாத
ஞாலம் வாழ்த்தும் சிறுவர் நாங்கள்

நாலும் இரண்டும் பயில்பவர்கள்
நன்மை செய்யத் துடிப்பவர்கள்
சாதனை பல புரியப் போகும்
சாந்தமுள்ள வீரர் நாங்கள்

கடமை உணர்வு நிறைந்தவர்கள்
கல்விக் கடலில் மிதப்பவர்கள்
கனிவான மொழிகள் பல
கற்றுத் தேர்ந்த சிறுவர் நாங்கள்.

முன்பள்ளி ஆசிரியர்
திருமதி. ரசேந்திரன் சுவஸ்திகா

பாடசாலை அபிவிருத்திக் குழு - 2014



பாடசாலை அபிவிருத்திச் சங்கம் - 2014



அதிபருடன் முன்பள்ளி ஆசிரியர் மாணவர்கள் - 2014



ஆசிரியர் தினவிழா - 2014



# முன்பள்ளியின் முக்கியத்துவம்

ஒரு குழந்தையின் ஆரம்ப காலப் பருவம் விரைவான வளர்ச்சியினையும் விருத்தியினையும் கொண்டதாக அமைந்துள்ளது. அவர்கள் முன்பள்ளிக்கு வருகின்ற போது ஏற்கனவே அவர்களது குடும்பம், நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள், இவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட அனுபவங்களுடன் முன்பள்ளிக்கு வருகின்றார்கள். முன்பள்ளியில் அவர்கள் ஏனைய குழந்தைகளிடம் உறவாடுகின்றனர். இதன் மூலமும் தொடர்ந்து அனுபவத்தை வளர்த்துக் கொள்கின்றார்கள். அதேவேளை அவர்கள் மிக முக்கிய அனுபவங்களை தமது சமூகத்திலிருந்தும் குடும்பத்திலிருந்தும் தொடர்ந்து பெற்றுக் கொண்டே இருக்கின்றனர்.

## பிள்ளை மையக்கல்வி

பிள்ளை மையக் கல்வி முறையில் புலன்களுக்கான பயிற்சியின் முக்கியத்துவத்தை மரியா மொன்ரி சோரி அம்மையார் வலியுறுத்தினார். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் ஆரம்ப பிள்ளைப் பருவ கல்வியின் நவீன போக்குக்கு ஏற்ப வெளிவந்ததே "பிள்ளை உணர்ச்சி" கல்வி என்ற எண்ணக் கருவாகும். இப்பதம் கலைத்திட்டச் செயற்பாடுகளைத் தீர்ப்பதில் ஆரிசியர்களது பங்கினைக் காட்டுகின்றது. இங்கு ஆசிரியர்கள் பிள்ளைகளது நாட்டத்திற்குரிய பயனுள்ள தலைப்புக்களைத் தெரிவு செய்ய ஆசிரியரின் பங்களிப்பு பெறப்படுகின்றது. பிள்ளைகளது கவனத்தை ஈர்த்து ஆழமான விளக்கத்தைப் பெற உதவக் கூடியவாறு இங்கு திட்டமிடல் இடம்பெறுகின்றது.

எல்லாப் பிள்ளைகளும் தமது இயற்கைச் சூழலிலுள்ள உயிர் வாழ்பவைகளில் நாட்டம் கொள்கின்றனர். இந்த நாட்டத்தின் மூலமும் விளையாட்டின் மூலமும் கண்டு பிடித்தல் மூலமும் அவர்கள் கற்றுக் கொள்கின்றனர்.

இயற்கைச் சூழலில் செயற்படுவதன் மூலம் பிள்ளைகளுக்கு புலன்களின் ஊடாக கற்றல் அனுபவங்கள் கிடைக்கின்றன என ரூசோ கூறியுள்ளார். அவர் "பிள்ளைகளுக்கு விடுதலை வழங்கியவர்" எனப் பொதுவாக அழைக்கப்படுகின்றார். சரியான விருத்திக் கட்டத்தில் இருந்தால் பிள்ளை கற்பதற்குத் தயாராகின்றான்.

முன்பள்ளி ஆசிரியை
திருமதி.இ.பாலகௌரி

# பொன்மொழிகள்

01) கண்பார்வை அற்றவன் குருடன் அல்ல. தன் குற்றங்களை உணராதவனே குருடன்.

02) மிகச் சிறந்த வழிகாட்டி உன் மனச்சாட்சியே.

03) மனத் தூய்மையின்றி மாதவம் புரிந்தாலும் பலன் கிடையாது.

04) பிறருக்குக் கொடுத்துண்ணும் போது ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

05) மதியின் வல்லமையை காட்டிலும் விதியின் வல்லமையே பெரியது.

06) ஒரு நொடியில் நாம் செய்யும் தவறு வாழ்நாள் முழுவதும் வேதனையைத் தருகிறது.

07) உண்மையாகவும் நேர்மையாகவும் இருந்தால் உலகில் யாருக்கும் பயப்படத் தேவையில்லை.

